ஆத்மஜோதி

ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்

ஜோதி 14 | பிலவ ௵ மாசி ௴ 1௳ (14-2-62) | சுடர் 4

பொருளடக்கம்

1	கீதாஞ்சலி	... 121
2	இறைவனை அழை	... 123
3	காகமும் நாயும்	... 125
4	சக்தி வணக்கத்தின் சிறப்பு	... 129
5	பேராளன் கண்ணன்	... 134
6	மறு உயிர் எழுச்சி	... 136
7	பிருந்தாவன மகிமை	... 138
8	நாமஸ்மரணை	... 143
9	திருமுருக நற்சிந்தனை	... 144
10	காகமும் நாயும் தொடர்ச்சி	... 145
11	பிரேமைபக்தி	... 147
12	தமிழ்மறைக் கழகம்	... 151
13	நாதப்பிரம்மம்	... 152
14	முருக வழிபாட்டின் தோற்றமும் தொன்மையும்	... 156

ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்ம ஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]

மகாகவி தாகூரின்

கீதாஞ்சலி

18. தனிமைத் துயர்

மேகம் திரளுது; வானம் இருளுது;
வீட்டைவிட் டெங்கோ வெகுதொலைவில்,
ஏகத் தனிமையில் சோகத்தி லேகிடந்
தென்னைத் துடிக்கவைத் திட்டதுமேன்?

பொங்கிப் பரபரப் போடுசெ லும்பகற்
போதிற் சனத்தில் நெரிபடுவேன்;
கங்குல் அமைதியில் கண்மணி நின்முகம்
காண்பதற் கென்றே தனித்துளனே!

இன்பச் சுடர்முகம் காட்டாம லேயெனை
ஏங்கித் தனிக்கநீ விட்டுவிட்டால் — இத்
துன்பப் பெருமழை நேரத்தை எப்படித்
தொலைப்ப தென்றே தயங்குகின்றேன்!

மையிருள் சூழ்ந்த நெடுந்தொலை வான்மிசை
வைத்தகண் ணையின்னும் வாங்கவில்லை;
பெய்மழை காற்றுடன் என்மன மும்பொங்கிப்
பீறிட் டழுது புலம்பிடுதே!

19. திண்ணம்!

பேச்சற்ற நினது இந்நாட்
பெருமோனம், எனதுள் ளத்தில்
ஆச்சர்யப் பொறுமை யூட்டும்;
அணுவுமூ டாது கங்குல்

பூச்சுடர் விழிக ளாலே
பொறுமையாய் நுணு கி யாயும்
காட்சி போல், உனது பேச்சைக்
காத்திருந் தினிது கேட்பேன்!

உதயப்பொற் கதிர்வை யத்துள்
உதிப்பதும், இருள் ஒளிக்குள்
புதைவதும் திண்ணம்; வானப்
பொதுவழிப் புகுந்து வந்துன்
மதுரத்தேன் குரல், ஒளிப்பொன்
மணியிசை நதியாய்ப் பொங்கி
இதயங்கள் தோறும் பாய்ந்து
இன்புறுத் திடலும் திண்ணம்!

அப்பொழு தெனது வண்ணத்
தழகுப்புட் கூண்டி லெல்லாம்
கற்பனைக் கடங்கா நின்சொற்
கட்டுக்கள் சிறை விடுத்து,
அற்புதக் கீத மாகப்
பறக்கும், அவ் வருட் சுவை, என்
பொற்கவிப் பொழில்கள் தோறும்
பூத்தெழில் வனமாய்ப் பொங்கும்!

''பரமஹம்ஸதாசன்''

மெய்ந்நெறி முப்பது

வடிவை — சிவசுப்பிரமணியபிள்ளை இயற்றியது.

— வெளியிடுவோர் —

மெய்ந்நெறிக் கழகம்,
நீராவித் தெரு, வடிவீசுவரம், தென் இந்தியா.

இந்நூலில் வாழ்க்கையில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிகளையும் அதனால் அடையும் பயன்களையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

விலை குறிப்பிட வில்லை

இறைவனை அழை

(ஆசிரியர்)

குழந்தை விளையாட்டுப் பொருட்களிலே மனதைப் பறிகொடுத்திருக்குமளவுக்கு அன்னையை மறந்திருக்கிறது. தான் வைத்திருக்கும் விளையாட்டுப் பொருட்களின் மீது ஒரு சலிப்புத் தோன்றுகின்றது. உடனே அன்னையின் நினைவு வந்து விடுகின்றது. அம்மா எனும் சத்தம் அன்னையின் காதில் விழுகின்றது. ஓடோடியும் உடனே வருகின்றாள். அள்ளி அணைத்து ஆனந்தம் பொழிகின்றாள்.

நாம் எல்லாம் அன்னை பராசக்தியின் அன்புக் குழந்தைகள். இவ்வுலகிலே உள்ள விளையாட்டுப் பொருட்களிலே ஈடுபட்டு அன்னையை மறந்திருக்கிறோம். குழந்தையை எந்த ஒரு விளையாட்டுப் பொருளும் ஒரு சில நிமிடங்களுக்கு மேல் ஏமாற்றிவிட முடியாது. குழந்தையின் உள்ளமும் நீண்ட நேரம் அதில் ஈடுபட்டிருக்க இடம் கொடுப்பதில்லை. நாமோ ஆண்டுக் கணக்காக அல்ல, பிறவிக்கணக்காக எமது ஆசையை அகற்றுவதில்லை. ஒரு ஆசையை அனுபவித்து முடிவு காண ஓராயிரம் பிறவிக்கும் ஆயத்தமாக இருக்கிறோம். எது உண்மை இன்பம் என்பதை அறியத் தவறி விடுகின்றோம். துன்பத்தை இன்பம் என ஏமாந்து துள்ளிக் குதிக்கின்றோம்.

அன்னை பராசக்தி எமது குரலைக் கேட்க எந்நேரமும் தனது காதைத் தீட்டி வைத்துக் கொண்டே இருக்கிறாள். நாமோ குரல் கொடுக்காத ஊமைகளாய் இருக்கின்றோம். வாய்விட்டு அழவும் தெரியாது; அழைக்கவும் தெரியாது. உள்ளம் நிறைந்த அன்போடு அழைக்க வேண்டும். கட்டாயம் ஆதிபராசக்தி கேட்பாள். கேட்டதும் ஓடோடியும் வருவாள். இங்ஙனமேதான் ஆண்டவனின் பெரியபக்தர்கள் முற்காலத்திலே அவனது அளவிலா அருளைப் பெற்றார்கள் என வேதங்கள் முழங்குகின்றன. அன்பு மொழியை எதிர்த்து நிற்க உலகில் எவருக்கும் சக்தியில்லை. குழந்தைக்கோ வாசாலகமாகப் பேசத் தெரியாது. தனது தளர்மொழியாலே அன்னையின் மனத்தை மாத்திரமல்ல, எல்லோர் மனத்தையும் மயக்கிப் பிழிந்து விடுகின்றது குழந்தை. இதேபோல் உண்மைப் பக்தனும் தனது கபடமற்ற முறையீட்டால் சர்வவல்லமையுள்ள தனது இதயேசனைத் தன்னி

டம் அழைக்கின்றான். பக்தனுடைய மொழி குழந்தையின் மொழியைப் போன்றது. அவன் எம்மொழியிலும் பாண்டித்தியம் அடைந்தவன் அல்லன். குழந்தைகளுக்கெல்லாம் குழந்தைத் தன்மை அடைந்தவன் பக்தன். கண்ணீர் விட மாத்திரமே கற்றுக் கொண்டவன். அன்பு மேலீட்டினால் அழத் தெரியும். வாய் குழறும். துன்பம் வந்தாலும் கண்ணீர் விடத்தான் தெரியும். அவனுடைய ஆயுதம் அழுகை ஒன்றே. இந்த அநுபவத்தில் மணிவாசகப் பெருமானார் கை தேர்ந்தவர். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று கூறுகின்றார். இறைவன் இருதய உணர்ச்சியின் வெளிப்பாட்டைப் பார்ப்பவனே தவிர மொழியின் பாண்டித்தியத்தைப் பார்ப்பவனல்ல.

உள்ளமே வீணை. பக்தி அன்பனை அழைப்பதற்காக அதை மீட்டும் மந்திர வசியமாகும். பக்தன் இதனை இரு வழிகளில் உபயோகிக்கின்றான். இன்னிசையால் இறைவன் புகழ் பாடுதற்கும் இறைவனை அழைப்பதற்கும் உபயோகிக்கின்றான். அன்பு கலத்தலே பக்தனின் மொழிக்குரிய சந்தமாகும். பக்தன் இறைவனோடு பேசுகின்றான். இறைவனோடு பேசத் தெரியாதார் அவனைப் பைத்தியம் என்கின்றனர். யார் பைத்தியம்? காம காஞ்சனத்துள் அழுந்திக் கிடப்பவன் பைத்தியமா? அன்றி இறைவனின் காட்சி ஒன்றுக்காக காம காஞ்சனங்களை உதறித் தள்ளியவன் பைத்தியமா?

தெய்வ இன்னிசையின் கீதம் பக்தனின் சரீரம் முழுவதும் சிலிர்க்கச் செய்கிறது. ஆனந்த பரவசம் அல்லது வருணனைக் கடங்காத இன்பம் உள்ளத்தில் அலை அலையாக எழும்புகிறது. அன்பு கண்ணீராறாகப் பெருகுகிறது. தூய்மை, சாந்தி, ஒளி இவையே பக்தனின் உருவமாகும். சிடுசிடுப்புக்கோ அல்லது வெடுவெடுப்புக்கோ அங்கு இடமில்லை. இதுவே அவனது நிறைந்த பக்தி. ஆத்ம சமர்ப்பணத்தின் உச்சநிலை. பக்தன் தனது சீவியம், ஆன்மா, தேகம் முழுவதையும் ஆண்டவனின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றான். இதுவே பேசாத பேச்சு நிலை. இந்நிலை எய்தி விட்டால் இறைவனை அழையாமலே அவன் ஓடி வந்து குடியேறி விடுகின்றான்.

காகமும் நாயும்

(தி. கி. லக்ஷ்மி)

தற்கால மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தினமும் தவருது ஒழுங்காகச் செய்து வரும் செயல்கள் யாவை என்று உற்று நோக்கின் பசியாற உண்பதும், வித விதமான ஆடை ஆபரணங்களை அணிவதும், ஆனந்தமாய் நித்திரை செய்வதும், இனத்தைப் பெருக்குவதும்தான் என்பதை அறிகின்ருேம். ஆனல் நாம் எல்லோரும் செய்வதெல்லாம் ஒன்றுதான். பொருள்கள்தான் வித்தியாசமாயிருக்கின்றன. பணக்காரன் பட்டாடை உடுத்தி, பஞ்ச பக்ஷ பரமான்னத்துடன் உண்டு, பெரிய வசதியான பங்களாவில், மின்சார விசிறி பொருந்திய அறையில், பட்டு மெத்தை விரித்த கட்டிலில் படுத்து உறங்குகின்ருன். ஏழை கூழைக் குடித்து, அழுக்குக் கந்தையை உடுத்தி, தெருவில் புழுதியில் படுத்து உறங்குகின்ருன். வேற்றுமையானது உடை, உணவு, இடத்தில்தான் இருக்கிறதே அன்றி இந்த சரீரம் அடையக்கூடிய பயன் ஒரே மாதிரியாகவே உள்ளது. பாட்டாளி காலையிலிருந்து மாலை வரை நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபடுவதும், இந்தச் செய்கைக்காகவேதான்.

தற்காலத்தில் மாணவர்களைக் கல்லூரிக்கு அனுப்பி, நிலத்தை விற்று, வீட்டை விற்று ஆயிரமாயிரமாகப் பணத்தைச் செலவு செய்து படிக்க வைப்பதும் இந்த ஒரே காரணத்திற்காகத்தான். வீட்டில் பெண்கள் நாள் முழுவதும் பாடுபடுவதும் இதற்கேதான். வீட்டின் தலைவன் காலையிலிருந்து மாலைவரை ஆபீஸில் சென்று மிகவும் கஷ்டப்பட்டு அடிமை வேலை செய்வதும் இதற்காகவேதான்.

இவை நான்கையும் தவிர வேருென்றையும் அறியாத மக்கள் என் செய்வார்கள்?

நல்லவை எவை? தீயவை எவை? என்று சிந்திக்காமல் எந்த விதத்திலாவது பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். உண்டு உடுத்தி ஆனந்தமாக இருக்க வேண்டும். இதுவே இவர்களின் லக்ஷியமாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள்.

இதன் காரணமாக சுயநலம், பொய், களவு, கொலை,

பொருமை, மற்றும் தீக்குணங்கள் இவர்களிடம் வளர ஆரம்பிக்கின்றன. மற்றவரைக் கெடுத்துத் தான் சுகமே வாழ எண்ணமிடுகிருர்கள். இக் காரணங்களினுல் உலகத்தில் அறம் கெட்டு மறம் ஓங்கவாரம்பித்து விட்டது. எங்கு நோக்கினுலும் ஒருவனுடன் மற்றொருவன் சண்டை போடுவதையும், ஒரு நாட்டுடன் மற்றொரு நாடு போர் தொடுப்பதையும், அதற்கான உதவிக்குப் புதிது புதிதான அணு ஆயுதங்கள் தயார் செய்வதையும் காண்கிருேம். இதன் காரணமாக பிறரை நாசப் படுத்துவதோடு நில்லாமல் தங்களையும் நாசம் செய்து கொள்கின்ருர்கள். என்னே அறியாமை! இதனுல்தான் ''திருவள்ளுவனுர்'' கூறுகின்ருர்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீய செயல்கள் தீயனவாகக் கருதி அஞ்சப்படும்.

அதுமட்டுமல்லாது வள்ளுவனுர் இன்னும் கூறுகின்ருர். கேளுங்கள்.

"எனைப் பகையுற்ருரும் உய்வர் வினைப்பகை
வீனை பின் சென்று அடும்"

எவ்வளவு கொடிய பகையை உடையவரும் ஒரு வகையால் தப்பி வாழ முடியும். ஆனுல் தீயவை செய்தலால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் எத்தனை ஜன்மமெடுத்தாலும் பின்சென்று வருத்தும். இது எப்படியிருக்கின்றது என்ருல் ஒருவனுடைய நிழலானது எவ்வளவு வேகமாக ஓடினுலும் அவனை விடாது பின் தொடர்ந்து, செல்வது போலவாம். இதையும் திருவள்ளுவ பிரான் மிக அழகாக எடுத்து விளம்புகின்ருர்.

''தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயாது அடி உறைந் தற்று'' குறள்

தீய செயல்களைச் செய்தவர் கேட்டை அடைதல் ஒருவனுடைய நிழல் அவனை விடாமல் வந்து அடியில் தங்கியிருத்தலைப் போன்றதாம்.

இத்தனை அறிவுரைகள் நமக்காக திருவள்ளுவனார் தயாரித்து வைத்திருக்கும் பொழுது அவற்றை உற்று நோக்கி நல்லறிவைப் பெற்று நல்லோர்களாகாதது ஏன்? இதுவரை நமக்குத் தெரிவித்ததை விட மிகவும் உயர்வான குறள் ஒன்றை கீழே தருகிறார். நாம் நன்மை அடைய வேண்டும் என்ற ஒரு சுயநல எண்ணம் கொண்டாவது தீமையைச் செய்யாமலிருக்குமாறு நம்மிடம் வேண்டுகின்றார். என்னே அவருடைய இரக்க சிந்தனை!

தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்'' குறள்

ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ்பவனாயின், தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும்.

இதற்கும் மேலாக நமக்கு புத்தி புகட்ட யாருக்குமே தெரியாது. உள்ளங்கை நெல்லிக்கனிபோல நமக்கு எடுத்துக் கூறியும் நாம் திருந்துவதாகக் காணோம்.

இதற்காகவேதான் நம் முன்னோர்கள், அறிவில்லாத மக்களுக்குச் சொன்னால் புரியாது, அவர்களும் திருந்த மாட்டார்கள், என்ற எண்ணம் கொண்டவர்களாய் சாஸ்திரம் என்ற சட்டத்தை ஏற்படுத்தினார்கள்.

''கடவுளைத் தியானம் செய்ய வேண்டும்; உண்மை பேச வேண்டும்; தர்மம் செய்ய வேண்டும்'' என்றெல்லாம் உபதேசம் செய்வதைவிட, ''தர்மம் செய், இல்லையென்றால் நீ நரகமடைவாய்; உண்மை பேசு, இல்லையென்றால் யமதர்ம ராஜனுடைய ஆட்களால் சித்திரவதை செய்யப்படுவாய்; விபசாரம் செய்யாதே, செய்தால் நரகலோகத்தில் பழுக்கக் காச்சிய இரும்பு உலக்கையால் ஹிம்சையடைவாய்'' என்றெல்லாம் அச்சுறுத்தி; குழந்தைகளைப் பெற்றோர் பயமுறுத்தித் திருத்துவதைப் போல் திருத்தி நல்வழியில் நடத்த முற்பட்டார்கள். இப்படியும் அறிவு பெறாத மக்களுக்கு, தாங்கள் ஆறறிவு படைத்தவர்கள், மிருகங்கள் — பறவைகள் மற்ற ஜந்துக்களை விட மேலானவர்கள் என்ற எண்ணத்துடன் இறுமாந்து, மற்ற ஜீவ ஜந்துக்களையும் விடக் கேவலமான தீக்குணத் தீச்செயல்களையுடைய கீழ்த்தரமான மக்களுக்கு; அந்த ஜீவ ஜந்துக்களை விட நீங்கள் மிக மிகக் கீழ்த்தரமானவர்கள்; நற்

குண நற்செயல்களை நீங்கள் உங்களை விடக் கேவலமானது என்று எண்ணிவரும் அந்த மிருகங்களிடமிருந்தாவது படித்துக் கொள்ளுங்கள் என்று சாஸ்திரம் என்னும் சட்டதிட்டத்தினுல் நமக்கு ரோஷத்தையும் உணர்ச்சியையும் ஊட்டுகின்றுர்கள் நம் முன்னோர்கள்.

இதுநாள் வரையிலும் நம் முன்னோர்கள், காலையில் எழுந்ததும் கடவுளைத் தொழுவதும் பின் ஸ்னனம் செய்யும் பொழுதும் மற்றும் உண்ணும் பொழுதும் சதா பகவன் நாமமே உச்சரித்துக் கொண்டும் சதா கடவுள் நினைவாகவே இருந்து கொண்டு சகல ஜீவ ராசிகளிடத்தும் அன்பு பூண்டு விளங்கி வந்தார்கள். அப்படியே மற்றவர்களும் பின்பற்றி நல்லவர்களாய் விளங்கி நன்மையடைய வேண்டுமென்ற சிந்தனையோடு சாஸ்திரம் என்னும் சட்டத்தை அவர்கள் ஏற்படுத்தினுர்கள்.

பள்ளியில் மாணவர்களுக்கு ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கிப் படித்துத்தான் தீர வேண்டும் என்று கட்டளையிடுகின்ற பொழுது அம்மாணவர்கள் கஷ்டப்பட்டு எப்படியாவது படித்து ஹிந்தியைக் கற்றுக் கொள்கிறுர்கள். இஷ்ட பாடமாக வைத்தோமானுல், ஹிந்தியை எவன் படிப்பது என்று அசிரத்தையாக இருப்பது போல, நீ நல்லதைச் செய்து நல்லவனுக இருக்க வேண்டுமானுல் இரு என்று கூறினுல் மக்கள் நல்லதைச் செய்யமாட்டார்கள் என்னும் காரணத்தால் அனுபவ பூர்வமாகத் தாங்களே நல்லனவற்றைத் தம்மறிவால் கண்டு அதன்படி நடக்கச் செய்கிறுர்கள்.

ஒரு மாணவன் நன்றுகப் படித்துத் தேறிச் சிறப்புடன் விளங்குவதை உதாரணமாகச் சுட்டிக்காட்டி படிக்காத மற்ற மாணவர்களைத் திருத்துவதைப் போல, மனிதர்களிலும் கீழானவையாக மனிதர்கள் எண்ணும் ஐந்துக்களை உபமானமாகச் சுட்டிக் காட்டி நீயும் அவைகளைப் போலாவது நல்லவையாய் நட என்று விளக்குகின்றுர்கள் பெரியோர்கள்.

நாம் சுத்தமாகத் தயாரித்த உணவை முதலில் எம் பெருமானுகிய முதல்வோனுக்கு நைவேத்தியம் செய்து, பின் இதுவரையிலும் சமையல் தயார் செய்ய உதவியாய்

மிகுதி 145 ஆம் பக்கம் பார்க்கவும்

சக்தி வணக்கத்தின் சிறப்பு

(திருமலை வர்ணன்)

தெய்வத்தை வழிபடும் முறைகள் பலவாகக் கிடப்பினும், அவை எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்ததாய் ஆன்றோரால் வியந்தோதப் பெற்றது அம்மை வணக்கம். ஏனெனில் ஒருவர்க்குத் தன் தாயிடம் உண்டாகும் அத்துணை உயர்ந்த தூய அன்பு வேறொருவரிடத்து உண்டாவது அரிது. ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் வாயினின்றும் அது அறியாமல் கிளம்பும் சொல் 'அம்மா' என்பதுதான். அச்சிறு குழவிக்கு முதல் முதல் அன்பு தோன்றுவது அதன் அம்மையிடத்தேதான். தந்தைபாற் கொள்ளும் உறவு அதற்குப் பிற்பட்டதே. தந்தையிடம் கொண்டுள்ள வணக்கம், பணிவு, அச்சம் முதலிய குணங்களால் முழு அன்பின் வலிமை சிறிது மறைபடவுங் கூடும். ஆனால் தாயிடமோ அவ்வாறுய தடைகள் ஒன்றும் அன்பிற்கு நேருவதில்லை. தனது குற்றங்களையும் கூடத் தன் தாயிடம் சிறுவன் ஒளிக்க முயலுவதில்லை. பொதுவாகத் தாயிடத்து ஒருவருக்குத் தோன்றும் அன்பின் முழுவேகமும் வேறிடத்துத் தோன்றுதல் அரிது.

மக்களன்பு இவ்வாறுகத் தாயினுடைய பேரன்போ இதனினும் உயர்ந்ததாய் அளவற்றதாய்த் திகழ்கின்றது. நமக்கு எத்துணை நெருங்கியவராய் இருப்பினும், நமக்கு வாழ்க்கைத் துணைநலன் என்று கூறிக் கொள்ளும் மனைவியேயாயினும், அவர்களிடத்து ஒப்புயர்வற்ற தாயின் தலைமைத் தனி அன்பைக் காணுதல் இயலுமோ? ஏழேழு கோடிப் பிறவிகள் எடுத்து அவ்வெல்லாப் பிறவிகளையும் அவள் பணி செய்வதிலேயே கழிப்பினும், அவள் ஒருநாள் வலிமையுற்று நாம் குழவிப் பருவத்திருக்குங் காலையில் நமக்குப் பேரன்போடு செய்த உதவிக்கு ஈடு நிற்குமா? அருளும் அன்பும் இரண்டும் சேர்த்து உருக்கி வார்க்கப் பட்ட வீட்டுத் தெய்வமன்றோ அவள்? எல்லாந் துறந்த துறவியாரான பட்டினத்தடிகளையும் சிறிது நேரம் துறவு

மார்க்கத்தினின்றும் அவர் நினைவை ஈர்த்துக் கொண்டது அவர்தம் தாயின் தலையன்பென்றால் அதன் தன்மையை யாம் என்னென்று கூறுவது? மக்களன்பேனும் வளர்ச்சி முகத்தான் மாறுபாடுற்றுப் பிறழ்ந்து போகலாம். ஆனால் நம்மைப் பெற்று வளர்த்த அருட் பெருந் தெய்வத் திரு மகளின் அன்பு எவ்வாற்றானும் மாறுபாடுறாத அருள் ஊற் றன்றோ? இந்நில வுலகத்து இறக்கும் வரை ஒரே படித் தாய் நிலைபேறுற்ற பேரன்பொன்றுளதாயின் அது தாயின் அன்பன்றி வேறில்லை.

அழியாத பேரன்பே கடவுளாகலானும், அதை அன் பன்றி வேறு எதனாலும் அடைய முடியாதாகையானும் அன்பிற்குப் பேரிலக்கணமாய் நிற்கும் 'அம்மை' என்ற முறை யில் வைத்து அதை வணங்குதலே மிக்க உயர்ந்த தெய்வ வழிபாடாய் ஆன்றோர் கொண்டனர். மற்றும் இதனுள் கவனிக்கற்பால தொன்றுண்டு. தெய்வ வழிபாட்டிற்கு இன்றியமையாதது வேண்டற்படுவது கள்ளங் கபடமற்ற உள்ளம். அது சிறுகுழந்தைகளிடத்தன்றி வயது வந்தவர் களிடம் காண்டல் அரிது. தாய்க்கும் பிள்ளைக்குமுள்ள தொடர்பின் தூய்மை வேறு தொடர்புகளில் இல்லை. எனவே 'அம்மை' வழிபாட்டால் இரண்டு பெரும் நறுங் குணங்கள் நம்மால் நிலையுறுகின்றன. அவைதான் அன்பும், தூய்மையுமாம். இக் குணங்கள் கைவரப் பெற்றால் நமக்கு வீட்டின்பம் தானே எளிதிற் கிடைக்கும்.

கடவுள் அன்பு மயமானவர். சிவம் என்ற சொல்லு க்கு அன்பு என்றே பொருள். 'அன்பே சிவம்' என்றார் திரு மூலர். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என் னுடையன்பே' என்றார் மணிவாசகர். இவ்வன்புதான் சிவம், மால், பரை, வேலன் என்று பல்லாற்றான் பல்லோரால் வணங்கப் படுகிறது. இவ்வண்டங்களையெல்லாம் தோற்று வித்துக் காக்கும் 'அன்பன்னை' என இறைவனை வணங்கு தலே பெருநெறி. கடவுளை ஆண் முறையில் வைத்து வழுத்தும் பெரியாரும் இந் நெறியினின்றும் நீங்கினா ரில்லை. சிவபரம்பொருளை நோக்கி 'என்புருக்கி' மணிவாசகர்

"அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே''

எல முதற்கண் அம்மையே என்று விளிக்கின்றார். சிவனுடைய கூடல் விளையாடல் அறுபத்து நான்கினையும் கூறப் புகுந்த பரஞ்சோதி மாமுனிவர் —

'சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய'

என்று காப்புக் கூறுகின்றார். தாயின் அன்பின் மூலந் தான் குழந்தைகள் அப்பனது அருளைத் தேடு கின்றன. தாயருள் பெற்றபின் தந்தையின் கூட்டுறவு கிடைக்க வேண்டும். இஃதே பட்டணத்தார். ஞான வழியால், 'தாயுடன் சென்று தாதையைக் கூடி' என்று விளக் குவது.

பிற்காலத்துப் புலவர்களும் இந்நெறியினையேகையாண்டனர். இரண்டொரு சான்றுகள் பின் வருமாறு. ஐந்தக் கரப்படியில் ஐம்பொற் காசு பெற்ற அருட்புலவராகிய படிக்காசுத் தம்பிரான் எம்பெருமான் அருள்பெற வேண்டி எம்பெருமாட்டியிடம் 'தாயே! அரியணைமீது நின் கேள்வன் நின்னோடு கொஞ்சிக் குலாவி மகிழுங் காலத்து என் குறைகளையெல்லாம் மெள்ளச் சொன்னால் உன் வாய் முத்தம் உதிர்ந்திடுமோ' எனப் பொருள் கொண்ட

'ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து
நீமுத்தம் தாவென்றவர் கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி வடிவம்மையே'

என்று குறை இரக்கின்றார். இது போன்றே சிவப்பிரகாசப் பெருந்தகையாரும் தாம் எழுதிய பெரிய நாயகியம்மை விருத்தத்துள் 'என்மனக்காட்டகத்துள் விளங்கும் காமத்திக்கும், கடுஞ்சினப் புலிக்கும், களிப்பு யானைக்கும்

அம்மையே! நீ அஞ்சினையேல் நெருப்பில் நடமிட்டு யானை புலி முதலியவற்றின் தோலுடுத்த நின் கேள்வனையும் உடன் கூட்ட வருவாயாக' என்று பொருள்படும்,

'காமமென் கின்ற கதுவுவெந்தீயும் கடுஞ்சின மெனப்படு புலியும்
களிப்பெனுஞ் சிறுகட் புகர் முகப் புழைக்கைக் கறையடிக் களிநல் யானையுமே
தாமிகு மெனது மனமெனும் வனத்தில் தனிவரல் பெரு வினையாயின்
தழலினின்றுடி கரிபுலியுரி போர்த் தடுத்த ஆண் துணை யொடும் வருவாய்'

என்று கூறிப் போந்தார். இது குறித்தன்றோ விவேகானந்த சுவாமிகளின் தவப் புதல்வியராகிய நிவேதிதா தேவியார் "உலகத்திற் குறுதிபயக்கும் பேறுறவான கொள்கை யாதெனில் அம்மையுணர்ச்சியே. அவள் போன்று நாமும் அன்பு வேண்டுவார்க்கு அன்பு கொடுப்போம். 'அம்மா' என்ற சொல்தான் உலகக் கடலுள் துயருறும் உயிர்கள் வந்தடையும் துறைமுகம். துன்பமுண்டான காலை எவரும் கூறுவது 'ஆ! கடவுளே' என்றல்ல. ஆனால், 'ஆ! அம்மா' என்பதுதான்' என்று நன்கெடுத்து விளக்கியுள்ளார். ஸ்ரீ இராமகிருஷ்ணர், அரவிந்தகோசர், பாவலர் பெருமான் பாரதி முதலியோர்களின் நூல்களைப் படிப்பதனுல் இவ்வுண்மையை நன்கு விளங்கிக் கொள்ள இயலும். எவ்வுருவில் ஈசனைப் பணிவாராயினும் எவ்வுருவில் ஈசன் அன்பர்க்கு அருள் செய்வானுயினும் அவ்வுருவமெல்லாம் அம்மை உருவமென்றே கொள்ளல் வேண்டும். ஈசற்கு பரு உரு எவற்றுள்ளும் திகழும் அருளுரு தாயின் தலையன்பே யாகும். அன்பு மிக மிக நுண்ணியதாய் "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்" பரனுடன் கூடுங் காலத்து அவனது வெளியுருமாறி உள்ளுருவாம் அம்மையின் வெகு நுண்மையாகிய அன்புருவே எங்கும் விளங்குமாதலால் அம்மையே உண்மையில் உள்ளாள் என்பது வெள்ளிடைமலை. இதுபற்றியன்றோ திருவாதவூரர் அன்புடையார்க்கு இறைவன் தாயாகத்தான் விளங்குகின்றார் என்பதை,

"சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி"

என்று விதந்தோதுகின்ருர். அன்பை அன்பாற்ருன் பெற முடியும். அன்புறைவிடமும் அன்பு பெறுமிடமும் அம்மையே. ஆகவே அம்மை வணக்கம் எவ்வணக்கத்தினும் உயர்ந்தது என்பது முடிவு.

'ஆதிப்பரம் பொருளின் ஊக்கம் — அதை
அன்னை யெனப் பணிதல் ஆக்கம்
சூதில்லை காணுமிந்த நாட்டீர் — பல
தொல்லை மதங்கள் செய்யும் தூக்கம்

— பாரதி.

வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு, பசியின்மை. வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் — அரிசிப் பாளையம்சேலம் 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி

மலாயாவில் கிடைக்குமிடம்:-

ஸ்ரீ கணபதி அன் கொம்பனி (ஜவுளி வியாபாரம்)

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ

போன் நெ. 39'7. த. பெ. 37.

உபயோகிக்கும் முறை

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்-கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம், நெய், பால், வெண்ணெய், நிறையச்சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினுல் தயாரிக்கப் பெற்றது.

பேராளன் கண்ணன்

[திமிலைக் கண்ணன்]

அதர்மந் தலைவிரித் தாடிடும் வேளையில்
அஞ்சேல்!... லென அருள்வான்! — எங்கட்
காபத்து வேளையில் காவல் புரிபவன்;
ஆயர் குலத் துதித்தோன்!

மண்ணிலும் விண்ணிலும் மாரியுங் கோடையு
மாகவிளங் கிடுவான்! — இந்த
மானிலத்தி லொரு மானைத் துரத்திப்பின்
மாரீச னுக்கிடுவான்!

வெண்ணெய்யு நெய்யும் திருடியுண் பான்;பெரும்
வேடிக்கை செய்திடுவான்! — இளம்
வேலவனுக் கிரு கன்னிய ரீந்து;பின்
வேடிக்கை பார்த்திடுவான்!

கன்னியர் பின்னே!.. திரிந் திடுவான்;அவர்
காதல னாகிடுவான் — இந்தக்
காதலைநன் குணராத கயவ ரின்...
கண்ணுக் கிருளாவான்.

பூவினி லெம்பெரும் பூதங்க ளாகியிப்
பூமகளைப் புணர்வான்! - உந்திப்
பூவினில்; நான்முகனை யுருவாக்கியிப்
பூதலத்தைப் படைப்பான்.

தட்டித் தடவித் திரியுங் குருடர்க்குத்
தானொரு பொல்லாவான்! - நம்முள்
முட்டித் ததும்பி முளைத்தெழும் சோதியாய்;
முத்தி நிலை பகர்வான்!

வெட்ட வெளியிற் பரந்தபரம் பொருளாக
விளங் கிடுவான்; — உளக்
கொட்டிலில்;அன்புக் கயிற்றுக் கிணைபவன்
கோபியர் காந்தனவன்.

சாவினின் போதவன் பாதம் பிடித்திடில்;
சாலோக முந்தருவான்; — இந்தச்
சாவினை வேண்டும்; நரகனின் வாழ்வொளி,
சாகா வகை புரிவான்!

ஏழைகளைக் கண்டு; எள்ளி நகைசெய்யும்
ஈனர்களைக் கடிவான்; - அன்று,
ஏழ்மையில் வாடி;முன் வந்த குசேலரை;
இறுகத் தழுவியவன்...

தானம் பெறுங் குள்ளனாக வந்து;மூன்று
தாளில் உலகளப்பான் — அவ
தானமும், நேர்மைத் துணிவும், விவேகமுந்
தானுள்ள தூதனிவன்!

பாரதப் போரினிற் தூது சென்று;பூமிப்
பாரத்தைத் தீர்த்திடுவான் — இந்தப்
பாரளந் தோன்பதம் பற்றிப் பிடித்திடப்
பாவவினை யகலும்.

தீராத... தீவினை தீர்ந்து விடும்;நன்கு
சித்தந் தெளிந்துவிடும் இந்தப்
பேராளன் கண்ணனின்பேர்சொல்லு;முன்துயர்
பேதலித் தேகிவிடும்!

மறு உயிர் எழுச்சி

(சுவாமி இராஜேஸ்வரானந்தர்)

மறு உயிர் எழுச்சி உயிரின் சக்தி வாய்ந்த உணர்ச்சியின் வெளிப்படுத்துகை.

சிலுவையில் அறைதல் உற்சாகமில்லாத, உணர்ச்சியற்ற, நலிவுற்ற எல்லா எண்ணம், பேச்சு, செயல்களைக் கடத்தலைக் குறிக்கின்றது.

தெய்வீக ஒளிபெற்ற உணர்ச்சி உன் கிலேசங்கள், உன் தோல்விகள், உன் குறைபாடுகள், உன் மறைந்த நம்பிக்கைகள், உன் இழந்த பேரவா முதலியவற்றிலிருந்து உன்னை உயர்த்துகிறது.

மறு உயிர் எழுச்சி கழிந்த நிகழ்ச்சியன்று. அது எப்போதும் உள்ளது, நிகழ்கின்றது.

நோயில்லாத, தீவினையில்லாத, இறப்பில்லாத வாழ்க்கைக்கு உன்னை உயர்த்துவதற்கு ஒவ்வொரு நாளும் மறு உயிர் எழுச்சி நாளே. அது அழிவற்ற ஆன்மாவின் புதிய உயிருள்ள உணர்ச்சியைத் தரித்துக் கட்டுப்பாடும் அடிமைத் தனத்தினதும் பழைய உணர்ச்சியைக் கழற்றுவதற்கே.

வாழ்க்கையின் நித்திய புதுமைக்குள் மீள வுயிர் பெறுவதற்கு அழிவுள்ள மனித உயிர், சினம், அழுக்காறு, வெறுப்பு, பொறுமையின்மை, தன் இரக்கம் முதலியவற்றில் அதன் வரையறுக்கும் எதிர்மறையான எல்லா நம்பிக்கைகளுடன் கடக்கப்பட வேண்டும்.

சிலுவையில் அறைதல் மறு உயிர் எழுச்சியை வெளிப்படுத்துகிறது. தெய்வீகச் சிலுவையை உயர்த்தி நித்திய அனந்த வாழ்வின் சுவாலிக்கும் ஒளியால் கல்லறையின் இருளை ஊடுருவிச் செல்வதற்கு நீ உன்னையே ஒறுக்க வேண்டும்.

மறு உயிர் எழுச்சி சாவின் சாயையின் பள்ளத்தாக்கிலிருந்து அமைதியும் முழுமையுமாகிய வாழ்க்கையின் ராச்சியத்துக்குள் விழிக்கச் செய்கிறது.

மறு உயிர் எழுச்சி, நோய், இணக்கம், பகைமை, துன்பம் முதலியவற்றில் உள்ள உலக நம்பிக்கைகளுக்குத் தினமும் இறத்தலே.

மறு உயிர் எழுச்சி உன் உணர்ச்சியை இருளிலிருந்து ஒளிக்கும், அவநம்பிக்கையிலிருந்து திட நம்பிக்கையாக்கும், அமைதியின்மையிலிருந்து அமைதிக்கும், வெறுப்பிலிருந்து அன்புக்கும், அழகின்மையிலிருந்து அழகுக்கும் உயர்த்துகின்றது.

மறு உயிர் எழுச்சி உன் உள்ளத்தைத் தெய்வீக வாழ்க்கையில் நிறுவுகின்றது, எல்லா இடையூறுகளையும் தவிர்ப்பதற்குத் தெய்வீக ஊக்கம் அளிக்கின்றது. நித்திய ஞானம் உடன் கொண்டு உன் அறிவுக் கூர்மையைப் புதுப்பிக்கின்றது. உன் குணவியல்பைத் திருத்தொண்டாத் தன்மையிலும் திருத்தூய்மையிலும் நிலைநாட்டுகின்றது.

றிசேர்க்கம் (Resurgam) என்பது ஒரு லத்தீன் சொற்பதம். அது சடமும் படுகுழியுமாகிய சேற்றிலிருந்து 'நான் திரும்பவும் எழுவேன்'' என்று பொருள்படுகின்றது.

மறு உயிர் எழுச்சி யெதார்த்தமான, ஆக்கப்பாடுள்ள சக்தி. மறு உயிர் எழுச்சி வெற்றி பெற்ற வாழ்க்கையின் தலைசிறந்த வெற்றி.

மக்கள் சுயராஜ்யம்

[ஜெயப்பிரகாஷ் நாராயணன் எழுதியது]

"எனக்கு சுதந்திரம் இனி என்றுமே விட முடியாத ஒரு பித்தம் போல் ஆகிவிட்டது. நான் வயிற்றுச் சோற்றுக்காகவோ, அதிகாரம் பெற வேண்டியோ, பாதுகாப்புக்காகவோ, முன்னுக்கு வரக் கருதியோ. அரசாங்கத்தின் மதிப்பைப் பெறவோ என் சுதந்திரம் சிறிதும் குறைக்கப் படுவதற்கு ஒருப்படேன்'' என்று இப்படியாக எத்தனையோ சுயராஜ்ய தத்துவத்தை விளக்குவது இந்த நூல்.

ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டியதொரு நூலாகும்.

சர்வோதயப் பிரசுராலயம் - - தஞ்சாவூர்.

விலை ரூபா 1-00

பிருந்தாவன மகிமை

— பிருந்தாவன பக்தன் —

எல்லா உலகங்களுக்கும் நாயகனுன கிருஷ்ணன் தன்னுடைய பிரத்யோக பிரயோஜனத்திற்கென்று ஒதுக்கி வைத்துக்கொண்ட இடம் பிருந்தாவனம். கோலோகமும் இப்படி தனக்கென்றே ஒதுக்கப்பட்டதானுலும் அதை கிருஷ்ண பக்தர்களை தவிர பிறர் பிரவேசிக்க முடியாது. பிருந்தாவனமோ எல்லோருடைய கண்ணுக்கும் புலப்படக் கூடியது. ஆகையால் இந்த இடத்தில் கிருஷ்ணனுடைய நிஜஸ்வபாவ குணத்தைக் கண்டு கொள்ள அவகாசமுண்டு.

பிரளயத்திற்கு முன்னும் பிருந்தாவனமுண்டு. பிரளயத்திற்கு பின்னரும் பிருந்தாவனமுண்டு. பிரளயத்தில் அழியாதது. இங்கு கிருஷ்ணன் தனக்குப் பிடித்தவர்களை வைத்துக்கொண்டு எல்லா உலகங்களின் க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்களை செய்து கொண்டு இருக்கிருன். கிருஷ்ணனுக்கு பிடித்தவர்கள் என்ருல் கிருஷ்ணனுடைய உடலிலிருந்தே பிறந்தவர்கள் என்று சொல்ல வேண்டும். இவர்கள் தான் கோபிகைகள், கோபாலர்கள், கோக்கள், மான்கள், மயில்கள், யமுனை மற்றும் பல ஜீவ ராசிகள் கிருஷ்ணனுக்கு பிடித்தவர்கள். ஆதலால் இவர்கள் பிருந்தாவனத்தில் தோன்றுகிறுர்கள். பிருந்தாவனத்தில் மறைகிறுர்கள். பிருந்தாவனமும் கிருஷ்ணனே.

மற்றவர்கள் கிருஷ்ணனுடன் நெருங்கிப் பழகி கிருஷ்ணனைக் கொண்டாட ஆசை கொள்ளாதவர்களும் சில சமயம் பிருந்தாவனம் வரலாம். கிருஷ்ணனுன பிருந்தாவனம் அவர்களையும் சில காலம் தலையில் தாங்கலாம். ஆனுல் அவர்கள் கிருஷ்ண பிரேமிகளாக ஆக்கப்படாது போனுல் கிருஷ்ணன் அவர்களை எப்படியாவது பிருந்தாவனத்தை விட்டு கிளப்பி விடுவான். ஆகையால் யாருக்கு நிரந்தர பிருந்தாவன வாசம் கிடைத்து விடுகிறதோ, அவர்களை கிருஷ்ண பிரேமிகள் என்றும் கிருஷ்ணனுடைய பூரண கிருபையை பெற்றவர்கள் என்றும் சொல்லி விடலாம். அவர்களிடம் மற்ற லக்ஷணங்களை எதிர்பார்க்க வேண்டியதில்லை

பிருந்தாவனம் கிருஷ்ணனுடைய சொந்த தனி வீடாகையால் அங்கு குடித்தனம் செய்ய அவனே எடுத்துக் கொண்ட பெண்ணுருவம் ராதை. கிருஷ்ணன் எவ்விதம் பாஞ்ச பௌதீக சரீரமற்றவனே அப்படியே ராதையும். பெண் புருஷன் என்பது கிருஷ்ண விஜயத்திலும் ராதை விஷயத்திலும் உல

கத்து பெண் புருஷர்களைப் போலன்று. பிருந்தாவனத்தில் கிருஷ்ணனென்றால் ராதையென்றுதான் அர்த்தம். ராதையென்றால் கிருஷ்ணனென்றுதான் பொருள்.. இதை மறக்கக் கூடாது. பிருந்தாவனத்தில் காணப்படும் வஸ்துக்களெல்லாம் உண்மையில் கிருஷ்ணனே. அவனே ராதையாகவும், கோபிகைகளாகவும், கோபாலர்களாகவும், கோக்களாகவும், மயில் பறவை, யமுனையாகவும் தோற்றமளிக்கிறான். இந்த உண்மையை அனுபவிக்கிறவர்கள் கிருஷ்ணபிரேமிகள், பாக்கியசாலிகள். கிருஷ்ணன் தாங்கிக் கொண்டிருக்க ஆசைப்படுகிறான். ஆகையால் அவர்களை பிருந்தாவனத்தைவிட்டு வெளியில் அனுப்பமாட்டான். அனுப்பினாலும் பிறகு கூட்டிக் கொண்டு விடுவான்.

கிருஷ்ணனிடம் உண்மையான அன்பு கொண்டு அந்த அன்பின் மிகுதியால் சுயநலத்தை மறந்து தேகாபிமானம் அகங்காரம் மமகாரமற்றவர்களாகி கிருஷ்ணனுடைய குணகானத்தாலும் கிருஷ்ணனுடையதேமனுத்த நாமத்தை இடைவிடாமல் ருசிப்பதாலுமே வாழ்கின்ற கிருஷ்ணப் பிரியர்கள் எப்பொழுதாவது ஒரு சமயம் கிருஷ்ண ஸ்வரூபமான இந்த பிருந்தாவனத்திற்கு இழுக்கப்பட்டு வருவார்கள். கிருஷ்ண ரஸிகர்களுக்கென்றே கிருஷ்ணன் இவ்வாறு தன்னை ஒரு உலகமாகவே செய்து கொண்டு இங்கு கூத்தாடுகிறான். இந்தப் பிருந்தாவனம் விரஜபூமி. இதில் பற்பல லீலாஸ்தானங்கள் உண்டு. பன்னிரண்டு வனங்கள். பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தனம், நந்திகிராமம், பர்சானு, ராவல், ஸங்கேதவடம், பிரேமஸ வோவரம் என்பதெல்லாம் கிருஷ்ணன் விளையாடும் இடங்கள். இவ்வளவு இடங்களிலும் அவன் விளையாடுவதைக் காணலாம். அன்பினால் மட்டும் அவன் இங்கு ஆட்சி புரிகிறான். அதனால் அவனுடைய அன்பை ராதையின் உருவத்தில் அவனுடனேயே இருப்பதையும்இங்கு காணலாம். அவனைத் தவிர வேறொன்றையும் எண்ணாமலிருப்பவர்கள் கோபிகைகள் உருவத்தில் இந்த ராதா கிருஷ்ணனை சுற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

இவ்வளவு கிருஷ்ணனுடைய லீலாஸ்தானங்களில் ஒவ்வொன்றாய் விவரிப்போம். முதலில் பிருந்தாவனத்தை நோக்குவோம், டில்லிக்கும் அக்ராவுக்கும் போகும் ரெயில் பாதையில் நடுவில் மதுரா ஸ்டேஷனிருக்கிறது, அந்த ஸ்டேஷனிலிருந்து 6 மைல் தூரத்தில் பிருந்தாவனமிருக்கிறது. பஸ்ஸில் செல்லலாம். சூரியனுடைய குமாரியும் யமனுடையசகோதரியுமான யமுனாதேவி இந்த பிருந்தாவனத்தைச் சுற்றி வருகிறாள். இந்த பிருந்தாவனத்தை நித்தியம் பிரதக்ஷிணம் செய்து வரும் பல சாதுக்களை

இங்கு காணலாம் இந்த மண்ணை மிதித்தாலே கிருஷ்ணனிடம் அன்பு பிறக்கும். இந்த மண்ணில் புரளுகிறவர்களும் உண்டு இந்த மண்ணை உடலெல்லாம் பூசிக்கொண்டு ஆனந்தமடைகிறவர்கள் உண்டு. இவர்களைக் கண்டால் கிருஷ்ணனுடைய அன்பின் உருவமான ராதைக்கு வெகு சந்தோஷம். ராதைக்கு சந்தோஷம் பிறந்தால் பிறகு அவர்களுக்குக் கவலை ஏது? பிருந்தாவன பிரதக்ஷணம் 6 அல்லது 7 மைல். கிருஷ்ணனுடைய மகிமையை விளக்கும் பல ஸ்தலங்கள் இந்த பிருந்தாவனத்தில் உண்டு.

முக்கியமாக இங்கு கிருஷ்ண மகிமையை அனுபவிக்கக் கூடிய கோயில்கள் பல. அவைகளில் முக்கியமான கோயில்களை மட்டும் இவ்விடம் குறிப்பிடுவோம். பாங்கி விஹாரிக் கோயில் ஹரிதாஸ் என்ற மகா புருஷருக்கு ராதா கிருஷ்ணன் தெரிசனம் அளித்தான். அவன் தெரிசனம் அளித்த கோலத்தில் அவன் எப்பொழுதும் இப்பொழுதும் தெரிசனம் அளித்துக் கொண்டிருக்கும் மூர்த்திதான் பாங்கிவிஹாரி. இந்த மூர்த்தி இப்பொழுதும் அவனிடம் அன்பு செலுத்துகிறவர்களுக்கு தெரிசனம் கொடுத்து தன்னிடம் வைத்துக்கொள்ளத் தயாராக இருப்பதால் இவனை தினந் தவருமல் எல்லா பிருந்தாவன வாசிகளும் தெரிசிக்கிருர்கள். ராதா வல்லபரின் கோயில் இரண்டாவது. பிருந்தாவனத்தின் ரஸத்தை பூரணமாக அனுபவித்தவர் ஹிதஹரிவல்லபர் என்பவர். இவருக்கு ராதாகிருஷ்ணன்தெரிசனமளித்தான் இவருக்குதெரிசனமளித்த கோலத்தில் நிர்மாணம் செய்யப்பட்ட கோயிலுக்கு ராதா வல்லப கோயில் என்று பெயர், இவர் ராதாகிருஷ்ணனை திருப்தி செய்து வசப்படுத்திக் கொண்ட வழிக்கு ராதாவல்லப சம்பிரதாயம் என்று பெயர். இந்த வழி 'ராதா' 'ராதா' வென்று உள்ளத்திலிருந்து ஜகன்மாதாவைக் கூப்பிடுவது தான். ஒருவித கதியுமில்லாத கைக் குழந்தை ஒருவித பலமுமற்ற சிசு அம்மாவைக் கூப்பிடுகிறதே, அவ்விதம் அம்மா ராதா அம்மா ராதா வென்று கூப்பிடுவது ஒன்றே அவர் சொல்லிக் கொடுத்த வழி 'மதன மோஹனன் என்ற ஆலயம் சைதன்யதேவரின் சிஷ்யரான சனுதன கோஸ்வாமியால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. சைதன்ய தேவரே ராதாக் கிருஷ்ணனின் அவதாரம். சைதன்ய தேவர் சனுதனரை பிருந்தாவனம் செல்லச் சொன்னுர். பிருந்தாவனமும் ராதா கிருஷ்ணனுடைய உருவமாக இருக்க வேண்டும். ஆகையால்தான் குரு நாதர் நம்மை அவ்விடம் செல்லச் சொல்லுகிருர் என்று நம்பிசனுதரர் பிருந்தாவனம் வந்தார். பிருந்தாவனத்தை ராதாகிருஷ்ணனுகவே எண்ணித் தொழுதார். ஒருநாள் பிச்சைக்குச்சென்றவீட்டில் அவர் ராதாகிருஷ்ணனைக் கண்டார்.

அந்தவீட்டுப் பையன்களுடன் அவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். இவரும் அவனைப் பார்த்தார். அவனும் இவரை பார்த்தான். மறுநாள் அந்த வீட்டுக்குச் சென்ற போது ராதா கிருஷ்ணன் இவருடனே வந்து விட்டான். இவர் இருந்த மரத்தடியில் அவனும் சில நேரம் வசித்தான். பிறகு அவன் என்னமோ செய்து தனக்குப் பெரிய மாளிகையை ஒரு பணக்காரஸேட் டின்மூலம்கட்டிக்கொண்டான் சனாதனரைத்தனக்கு பூசாரியாக வைத்துக்கொண்டு அவருக்கு ஆனந்தத்தை அளித்தான். அவன் நிர்மாணம் செய்து கொண்ட இந்தக் கோயிலுக்கு 'மதன்மோகன்' கோயில் என்று பெயர். இவ்விதமே சைதன்ய தேவரின் சிஷ்யரான ரூபகோஸ்வாமி மூலம் நிர்மாணம் செய்து கொண்ட கோயிலுக்கு 'கோவிந்த மந்திரம்' என்று பெயர். சைதன்ய தேவரின் சிஷ்யர் ஜீவகோஸ்வாமி இவர் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் 'கோபிஞத் மந்திரம்' கோபால பட்டர் என்று சைதன்ய தேவரின் சிஷ்யர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சாலிக்ராமத்தை பூஜை செய்து வந்தார். எல்லா சாதுக்களும் குழல் வைத்துக் கொண்டு, மயில் தோகை பூண்டு, அன்பே உருவான ராதையால் அணைத்துக் கொள்ளப்படும் கிருஷ்ணனை பூஜிக்கிறார்கள். எனக்கு மட்டும் கண் மூக்கு இல்லாத ஸாலிக்கிராமம் தானே பூஜைக்குக் கிடைத்திருக்கிறது, என்று விசாரப்பட்டார். உடனே அந்த ஸாலிக்கிராமம் பிளந்தது. அதிலிருந்து வசீகரமான வம்சீதர கிருஷ்ணன் மயில் தோகையுடன் ராதே ஸமேதனாய் தெரிசனம் அளித்தான். இவன் பெயர் ராதாரமணன் என்று சொல்லிக்கொண்டான். இந்தக் கோயிலை இன்றும் காணலாம். அங்கு வெடித்த ஸாலிக்ராமத்தில் ராதா கிருஷ்ணன் தோன்றுவதை காணலாம். இதைப் போல் பற்பல அனுக்ரஹ கோலத்தில் ராதா கிருஷ்ணனை பற்பல கோயில்களில் காணலாம். பிருந்தாவனத்தில் 'எல்லா' வீடுகளும், மாளிகைகளும் ராதா கிருஷ்ணனின் கோயிலே. எவ்விதம் இந்தக் கோயில்கள் உண்டாயின என்று விசாரித்தால் கிருஷ்ணனால் பிருந்தாவனத்திற்கு இழுக்கப்பட்டு வந்த கிருஷ்ண பக்தர்கள் கிருஷ்ணனிடம் அன்பு கொண்டு கதறியதையும் அவர்களுடைய அழுகையை போக்க கிருஷ்ணன் அருளிய தெரிசனத்தையும் விளக்கவே எல்லாக் கோயில்களும் ஏற்பட்டிருக்கின்றனவென்றறியலாம்.

இவ்வளவு கோயில்களையும், இந்தக் கோயில்களில் மனப்பூர்வமாய் வழிபடும் பக்தர்களையும் கண்டு அவர்களை தினந்தோறும் அம்ருதத்தில் குளிப்பாட்டி மகிழ்கிற தெய்வம் யமுனைத்தாய். இதை பிருந்தாவனத்தில் ஒவ்வொரு நிமிஷமும் பார்க்க வேண்டும். இந்தத் தாயைக் கண்டால் ராதையை

யும் கிருஷ்ணனையும் கண்டதாகவேயாகும்.

இந்த பிருந்தாவனத்தின் வெகு வெகு முக்கியமான மகிமை என்னவென்றால் இங்கு 'நிதிவனம்' என்றும் 'ஸேவாகுஞ்ஜம்' என்றும் இரண்டு இடங்கள் இருக்கின்றன. இவைகள் கொடிகளால் ஆன வனம். இவைகளைச் சுற்றி பெரிய மதில் உண்டு. இந்த வனத்திற்குள் சுற்றிச் செல்ல ஒற்றையடிப் பாதையுண்டு. அவ்விதம் செல்லும்போது ஊர்ந்துதான் செல்ல வேண்டும் கொடிகள் அவ்வளவு அடர்த்தியாக இருக்கின்றன. இங்கு குரங்குகளும் பறவைகளும் உண்டு. இந்த இரண்டு இடங்களிலும் தினந்தோறும் நித்யராஸம் நடைபெறுகிறது. இரவில் நடைபெறுகிறது. இதைக் காண்பவர்கள் மறுபடியும் உலகில் விவகாரம் செய்ய சத்தியற்றவர்களாகி விடுகிறார்கள். ஆகையால் இந்த இடங்களைஇரவில் தாளிட்டு விடுகிறார்கள். குரங்குகள் பறவைகள் எறும்புகள் கூட இரவில் அங்கு தங்குவதில்லையாம். இதன் உண்மையை சோதனை பார்க்கச் சிலர் இரவில் இந்த இடங்களில் தங்கினார்கள். மறு நாள் அவர்கள் மதியிழந்தவர்களைப் போல் சில நேரமிருந்து விட்டு பிறகு உயிர் துறந்தார்கள். ஒருவர் தான் கண்டதை எழுதிக் காட்ட முயன்றதாகவும் கேள்வி. ராஸத்தை அவர்கள் கண்டார்கள் என்பது திண்ணம். காமக்குரோதாதிகளால் இருண்ட கண்களுக்கு ராஸம் புலப்படாதது ஆச்சரியமில்லை. கண்ட பிறகு இவ் உலக துர்க்குணங்கள் சேர்ந்து விடுகின்றன. [தொடரும்]

நாராயணன் கைத் தொழிற்சாலை

தொல்புரம் — சுழிபுரம்.

மாபிள் சீமென்றினலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மாபிள் மேசைத் தட்டுகள் முதலாக எல்லாப் பொருட்களும், பூச்சாடி வகைகள், தண்ணீர்க் குழாய்கள், சீமென்ற் முகட்டோடுகள், மலசலகூடக் கற்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

எமது உற்பத்திப் பொருட்கள் வட மாகாணத்தில் உள்ள சகல இரும்புக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நாமஸ்மரணை

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே !
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரேஹரே!

மனுஷ்ய ஜன்மம் அடைந்து அதைப் பயன்படுத்திக் கொள்ளாவிடில் மிருக ஜன்மமே மேல். எப்படியும் மனிதன் பகவத் தர்சனத்திற்காகப் பாடுபடவேண்டும். அதுதான் உத்தமமான இலட்சியம். பகவத் தர்சனத்திற்கு ப்ரேம பக்தி தான் முக்கியம். ப்ரேம பக்தியில்லாவிடில் பகவத் தர்சனம் உண்டாகாது. ப்ரேம பக்திக்கு ஸாதனபக்திதான் வழி. ஸாதனையில் ருசி ஒன்றும் இல்லாவிடினும் போஜனம், நித்திரைபோல பழக்கமாகச் செய்துவந்தால் சீக்கிரம் மனப் பக்குவம் ஏற்படும். மனதினால் பக்தியில்லாத ஸாதனை எதற்கு என நினைக்கக்கூடாது. ஸாதனையினால்தான் பக்தி உண்டாக வேண்டுமே தவிர, பக்தி உண்டானபிறகு ஸாதனையில்லை.

எனவே த்ருவனைப்போல ஸாதனையைக் குறையாது வளர்த்துக்கொண்டே போக வேண்டும். நமக்கு ஓரளவு ஸாதனையில் ருசி இருந்தால் ஸத்குருவின் கிருபையும் சேர்ந்து பலனளிக்கும். இது இல்லாது குரு கடாக்ஷமாகவே ஸகலமும் ஏற்படட்டும் என்று இருந்தால் சோம்பேறித்தனமாகும். குழந்தை அழுதால்தான் தாயார் எடுப்பாள். க்ஷணம் கூட வியர்த்தம் செய்யக்கூடாது. உணவையும், உறக்கத்தையும் ஒடுக்க வேண்டும். வெளி வியாபாரங்களைக் கூடியவரை குறைக்க வேண்டும். மௌனம் தியானத்திற்குப் பேருதவி செய்யும். ஸத்ஸங்கம் மிக அவசியம். "இடையறாது நாம ஸ்மரணம் செய்யவேண்டும்". குறிப்பிட்ட நேரம் தியானம், ஜபம், கீர்த்தனம், பூஜை முதலியவைகளை அவசியம் செய்ய வேண்டும். இதுவே ஸாதன பக்தி, இதன் பலனாக ப்ரேம பக்தி உண்டாகும். ஸாதனையில் தீவிரமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி.

திருமுருக நற்சிந்தனை

(சங்கீதபூஷணம் சி. கணபதிப்பிள்ளை)

" அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலெனவேல் தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென் றோதுவார் முன் "

" முன்னே முருகா என்று ஒருமுறை நினைப்பவர்கள் முன்னே, வீரக்கழல்களணிந்த இரண்டு பாதாம்புயங்களும் தோன்றும். ஏன்? "முருகு" என்னும் அந்த மூன்றெழுத்தினிலேஅழகும்,இளமையும்,அறிவும், அருளும், அன்பும் ஆண்மையும் ஆறுமுகமும் பன்னிருவிழிகளும், ஆறிரு தடந்தோள்களும் அம்மைகளாம் வள்ளி, தெய்வதைப் பிராட்டிகளின் புன்முறுவல்களும் அமுதம் பொழியும் இனிய மொழிகளும், தோன்றித் தோன்றிக் கருணை பொழிகின்றதாம், என்று கூறுகின்றார். முருகனைக் கண்டு சிறை நீங்கப்பெற்ற நக்கீரனார். அப்படியானால் முருகா! முருகா!! என்று செபமாலை கைக்கொண்டு பலமுறை; துணைவா முருகா! துயர் தீர் முருகா! மணமார் கடம்ப மலராய் முருகா! மயில்வாகனனே வருவாய் முருகா! கருணாகரனே கதிர்வேல் முருகா! அருணோதயனே அருள் தா முருகா! திருமாதவனின் மருகா முருகா! திறல் சேர்தணிகாசலனே முருகா! முருகா! முருகா!! முறைகேள் முருகா! முருகா! முருகா! முதல் வா முருகா!" என்று உளங்கனிந்து உச்சியிற் கரங்களைக் குவித்து உருகி உருகிப் பலகால் அவனைச்சிந்திக்கும்குழந்தை உள்ளங்களிலே உறைந்து நமக்கு வேண்டிய செல்வமும், கல்வியும், சீரும் உதவி நந்நெறியொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி அணைத்து அருள் தருவான் முருகன் என்பதற்கும் ஐயமுண்டோ! வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா! ஞானவேல் முருகனுக்கு அரோகரா! கதிரை வேல் முருகனுக்கு அரோகரா!!!

சிவம்.

காகமும் நாயும்

காக்கைக்குச் சோறிடும்படி சாஸ்திரம் என்னும் சட்டத்தினுல் கட்டளையிடுகின்ருர்கள். எத்தனையோ பறவைகளிருக்க இந்தக் காக்கைக்கு உணவு இடுவது எதற்கு? அதுவும் நாம் உண்பதற்கு முன்னுல்? என்று ஆராய்ந்தோமானுல், பழைய காலந்தொட்டே நம்முன்ஞேர்களுடைய நல் வழக்கமென்னவென்ருல் விருந்தோம்புதலாகும். விருந்தினர்க்கு அன்னமிடாமல் தாம் உண்ணுவது அவர்கள் வழக்கமல்ல. அது மட்டுமல்ல, செல்வமுடையோர் வறியோருக்கும் பகிர்ந்து அளித்துத் தானும் அனுபவிப்பர். தம்மிடம் இருப்பதைச் சுற்றத்தோடு பகிர்ந்து உண்ணுவர். இதுவே நற்பண்பு. இந்நற்குணம் தற்காலத்தில் மிக மிகத் தேவையாகின்றது. இந்த நற்குணம் நம் ஒவ்வொருவரிடமும் இருந்ததென்ருல், நாட்டில் கலகமும் வராது. உலகத்தில் யுத்தமுண்டாகாது. பஞ்சமுண்டாகாது. ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லோரும் இன்புற்றிருப்பர். இப்பொருள் விளங்கும்படியாக திருவள்ளுவனுரும் கூறியிருக்கின்ருர்.

,'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீ ரார்க்கே உள''

காக்கை தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும்; ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

ஆஹா! தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் தன் சுற்றத்தாருடன் பகிர்ந்து உண்ண வேண்டுமென்பதை மிருகங்களைவிடக் கீழாக எண்ணும் பறவையிடமிருந்தல்லவா நாம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனிலும் வெட்கக் கேடு வேறு வேண்டுமோ?

இதோ நம்முன்ஞேர்கள் இதோடு நிற்கவில்லை. சோறு தயாரித்ததும் காகத்தை உபமானமாகச் சுட்டிக் காட்டி, சுற்றம் தழுவிப் பகிர்ந்து உண்ணும்படி கூறிவிட்டுக் கடைசியில் எச்சில் இலையில் கொஞ்சம் மீதம் வைக்கும்படி சாஸ்திரம் என்ற சட்டத்தினுல் உபதேசிக்ருர்கள். இதன் பொருள்தான் என்ன?

முதலில் தலைவனுக்கு நற்புத்தி கூறியது போல; இப்பொழுது சுற்றம் எப்படி விளங்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்கள். அதுவும் ஒரு மிருகத்தை உபமானமாக எடுத்துக் காட்டி

நாம் உண்டபின் மீதமாக வைக்கப்படும் சோறு நாய்க்காகவேதான் வைக்கப் படுகின்றது. எச்சில் இலையை விட்டு எறிந்ததும் முதலில் ஓடி வருவது நாயேதான். எத்தனையோ மிருகங்கள் இருக்க நாய்க்கு அன்னமிடுவதேன்? என்று கேட்போமானால் நாய் நன்றியுடைய பிராணி என்ற பெருமையினால்தான். நாய்க்கு ஒருவன் தினமும் எச்சில் சோறுவது சிறிதுஅளித்து வருவானேயானால் நாய் நன்றியுடையதாய் சதா அவன் கூடவே செல்லும் அவன் வீட்டில் திருடன் வந்தால் குரைத்து அவனை எச்சரிக்கை செய்யும். இவ்விதமாக அவன் வீட்டைக் காவல் செய்யும். சிறிது எச்சில் சோறு அளித்ததற்காக, நன்றியுடையதாய் அதை பிரம்பால் நய்ய அடித்து விரட்டினாலும் செல்லாது நின்று உதவி செய்கிறது. வள்ளுவர் கூறுகின்றார்:

"கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்".

(முன் உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற அன்பத்தைச் செய்தாரானாலும்; அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்).

பார்க்கப் போனால் மிருகம் அதுகூட தனக்குச் சிறிது உதவி செய்தவர் பின்னால் அநேக துன்பங்களைச் செய்த போதிலும் துன்பத்தைக் கண்டு கோபமடையாது. முன் செய்த சிறு உதவியையே பெரிதாகக்கொண்டு நன்றியுடன் உதவி செய்கிறது. இதையே திருவள்ளுவர் கூறுகின்றார்:

''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்''.

(ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும், அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்).

பேரறிவாளிகள் செய்ய வேண்டிய காரியத்தை, நாம் மிருகம் என்று கூறும் இந்த ''நாய்'' தன் சுயகுணச் செய்கையால் அறிவுறுத்துகின்றது. இதற்காகவே பெரியோர்கள் நமக்கு நேரிடையாக புத்திமதி கூறினால் நாம் தெரிந்து கொண்டு அதன்படி நடக்கமாட்டோம் என்று காகத்தையும், நாயையும் உபமானமாக எடுத்துக்காட்டி நற்புத்தி போதிக்கிறார்கள் என்பது எனது பரிபூர்ணமான நம்பிக்கையாகும். இது முற்றிலும் சரியா இல்லையா என்பதை வாசகர்களே! நீங்களே முடிவு கூறுங்கள் !

பிரேமை பக்தி

(சுவாமி அபேதானந்தா)

பிரேமை பக்தி என்பது எது? பகவானிடம் கொண்ட உறுதியான பிரேமைதான், பிரிக்க முடியாத அன்புதான் பிரேமை பக்தி. மோக்ஷத்தையும் துச்சமாகக் கருதுவதுதான் பிரேமை பக்தி. தியாக ரூபமானது பிரேமை பக்தி. தன்னை மறந்து ஸதா பகவானையே எண்ணும்படியான அன்புதான் பிரேமை பக்தி. கோபிகள் பகவானிடம் கொண்டிருந்த அன்புதான் பிரேமை பக்தி. நான் என்றும் என்னுடையது என்றும் இல்லாது எல்லாவற்றையும் விட்டு இறைவனை அடைவதுதான் பிரேமை பக்தி. துன்பமெல்லாம் தான் ஏற்றுக் கொண்டு பகவானுடைய சுகத்தைக் கருதுவது எதுவோ அதுதான் பிரேமை பக்தி. பகவானுக்குத் துன்பம் ஏற்படுவதைக் காண பக்தனுக்குச் சகிக்காது. அதனால்தான் கண்ணன் ராதையிடம் அவளுடைய பிரேமையைத் தனக்குத் தருமாறு கேட்ட பொழுது ராதை மறுத்து விடுகிறாள். பிரேமை பக்தியில் பல துன்பங்கள் ஏற்படுமே அவற்றை பகவான் அனுபவிக்க, அதைத் தான் எப்படி சகிப்பது என்று வருந்தினாள், ஆனால் கண்ணன் மேலும் மேலும் வற்புறுத்தவே, தன் பிரேமையுடன் தன்னையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறாள். ஏனென்றால் பிரேமையில் ஏற்படும் துன்பத்தையெல்லாம் தான் ஏற்றுக் கொள்ள, அந்த ஆனந்தத்தை மட்டும் பகவான் பருக முடியுமல்லவா? இப்படி ராதையும் பகவானும் சேர்ந்து அவதரித்தவரே சைதன்ய மஹாப் பிரபு.

பிரேமை பக்திக்கு மகுட'மாக விளங்குவது கோபி பக்தி. ஏன்? உலகம் விதித்திருக்கும் எந்த தர்மமும் கோபிகளுக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. இவை அனைத்தும் மனிதனது புத்தியிலிருந்து' பிறந்தவை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அதனால் அவை உண்மை அல்ல என்பதையும் கண்டவர்கள். புத்திக்கு எட்டாத பகவானிடம் பக்தி செய்யும் அவர்கள் இந்த தர்மங்களைத் துச்சமாகக் கண்டனர். சத்யம் செய்யும் வரும்பொழுது அது தர்மமாகிறது. சத்யம் ஒன்றுதான். பலவாக இல்லை. சத்யம் ஒன்றாக இருக்கும் பொழுது தர்மம் எப்படி பலவாக இருக்க முடியும். அதுவும் ஒன்றுதான். அந்த ஒரு தர்மம்தான் பகவானைச் சரணடைவது. மனித தர்மம், மிருக தர்மம், பிரஜா தர்மம், அரச தர்மம், புருஷ தர்மம்' ஸ்திரீ தர்மம் என பல தர்மங்கள் மனிதனால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இப்படி பலவாக இருப்பதே இந்த தர்மங்கள் எவ்வளவு பொய்யானவை என்பதைக் காட்டி விடுகின்றன. இந்த உண்மையை

உணர்ந்தவர்கள் கோபிகள். அதனால்தான் அவர்கள் 'க்ளீம்' என்ற வேணுகானம் கேட்டவுடன் தங்களை மறந்து, தங்கள் கர்மங்களை மறந்து கண்ணனிடம் ஓடினர். பதிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் ஒரு கோபி; குழந்தைக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்தாள் வேறொரு கோபி; கன்றைக் கம்பத்தில் கட்டிவிட்டு பால் கறந்து கொண்டிருந்தாள் மற்றொரு கோபி. இவர்கள் அனைவருடைய செவிகளிலும் அந்த 'க்ளீம்' நாதம் விழுந்தது. அவ்வளவுதான்; உடனே அந்த வேலைகளை அந்தந்த நிலையிலேயே விட்டு விட்டு ஓடினார்கள். பதியை அலட்சியப் படுத்துவது, குழந்தையைப் பசியோடு தவிக்க விடுவது, பசுவையும் கன்றையும் பிரிப்பது இவை பெரிய பாபமல்லவா? உலகத்தின் கண்களுக்கு இவை தவறாகத்தான் தோன்றும். ஆனால் கோபிகள் இந்த தர்மங்கள் அனைத்தையும் துறந்தவர்கள். அவர்களுடைய ஒரே தர்மம் அந்தக் கண்ணனை சரணடைவது தான். வேறு எது பற்றியும் அவர்களுக்கு சிந்தனையில்லை.; கவலையுமில்லை. இவர்களைப் பற்றிக் கவலைப் படுவதற்குத்தான் பகவான் இருக்கிறாரே! கோபிகளின் இந்த பிரேமை பக்திதான் கீதையில்

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஸ்யாமி மாசுச:

என்ற ஸ்லோகத்தின் வியாக்யானமாக அமைந்துள்ளது.

குருவாகிய ஸஞ்சயன் கீதையில்,

யத்ர யோகேஷ்வர: கிருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தர:
தத்ர ஷ்ரீர் விஜயோ பூதிர்த்ருவா நீதிர் மதிர்மம:

என்று பகர்கிறார். யோகங்களுக்கெல்லாம் தலைவனான - யோகேசுவரனாகிய கிருஷ்ணனும், பிரார்த்திப்பவனாகிய பார்த்தனும் எங்கிருக்கிறார்களோ அங்கு செல்வம், வெற்றி, மகிழ்ச்சி அனைத்தும் உண்டு என்று கூறுகிறார். அந்த பார்த்தன் கைகட்டி சோம்பேறியாக இருக்கிறானா? இல்லை. அவன் கையில் காண்டீபம் இருக்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் போராடும் கர்ம வீரனாக இருக்கிறான் பார்த்தன். பிரணவமாகிய அந்த வில்லில் புத்தியாகிய அம்பைத் தொடுத்து பகவானாகிய லட்சியத்தை நோக்கி எய்வதே போராட்டம். இந்தப் போராட்டத்தை நடத்துபவன், பகவானிடம் பரிபூரணமாகச் சரணடைந்த பார்த்தனாக இருக்க அங்கு வெற்றி ஏற்படத் தடை என்ன இருக்கிறது.

இதை கோபிகளிடம் காண்கிறோம். அவர்கள் கர்ம வீரர்களாக இருக்கிறார்கள். விடியற்காலையில் துயில் எழும் நேரத்திலிருந்து சிறிதும் ஓய்வு என்பதே இல்லாமல் வேலை செய்து கொண்டே இருக்கி

ருர்சள். ஆனுல் உள்ளமோ கண்ணனிடம் சரணடைந்து அவனைத் தன்னிடத்து கொலு வீற்றிருக்கச் செய்திருக்கிறது. பின் அங்கு பெற்றிக்கும், அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் குறையுண்டோ? இப்படி பகவானுடன் அவனுடைய லீலையில் பங்கு கொண்டு கொடுக்கப்பட்டிருக்கும் வேஷத்தைக் குறைவில்லாமல் திறம்பட நடித்தவர்கள் கோபிகள். இது எப்படி சாத்தியமாயிற்று? அவர்கள் பகவானிடம் கொண்டிருந்த அந்த அலௌகிகமான, அனன்ய பிரேமை பக்தியே இதற்குக் காரணம். அவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் படித்தவர்கள் அல்ல. அவர்கள் கற்ற படிப்பெல்லாம் ஒன்றுதான். எதைப் படிக்க வேண்டுமோ அதைப் படித்து விட்டார்கள். கடந்து போனவற்றைப் பற்றியோ, இருப்பவைகளைப் பற்றியோ, தங்களைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை. எப்பொழுதும் பூரண அமைதி, அவர்கள் கற்ற படிப்புத்தான் என்ன? பகவானிடம் அதீத அன்பு கொண்டிருப்பது - பிரபுவை மறவாத நிலை — அவனையே சரணம் அடைவது - இவர்கள் அல்லவோ பண்டிதர்கள்! இதைத்தான் கீதையும்

அஷோச்யான் அன்வஷோச்சஸ்த்வம் ப்ரஞாவாதம்ஸ்ச்ச பாஷஸே
கதாஸூன் அகதாஸூம்ஷ்ச்ச நானுஷோசந்தி பண்டிதா:

என்று அருளுகிறது.

பகவானுக்கு மிகவும் பிரியமானவர்கள் பக்தர்கள். அவன் பக்த வத்ஸலன். பக்தர்கள் அவனிடம் பிரேமை செலுத்துகையில் அவன் பகவானுக இருப்பதில்லை. பக்தனுக்கு பக்தனுக விளங்குகிருர். பக்தனது உள்ளம்தான் பகவான் தன் சுய உருவத்துடன் வீற்றிருக்கும் வாசஸ்தலம். மற்று ஞானிகளும், கர்மயோகிகளும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. ரஸரூபமாகிய பகவான் பக்தி அல்லது அன்பு என்னும் வலையில்தான் அகப்படுவான். பக்தனுக்குத்தான் 'தன் சுய உருத்தை, குணங்களுக்கெல்லாம் அதீதமான, தனக்கே சொந்தமான சகுனத்துடன் கூடிய உருவத்தைக் காட்டுகிருன். மற்றவர்களுக்கு அந்த உருவத்தைக் காட்டுவதில்லை. மறைத்துக் கொள்ளுகிருன். ஏனென்ருல் அவர்களால் அதை புரிந்து கொள்ள முடியாது. அதனுல் அவர்களுக்குக் கண்ணனுக தன் சுய உருவில் காட்சி கொடுப்பதில்லை. நான்கு கரங்களுடன், குணத்தோடு சம்பந்தப்பட்ட (படைக்கும் பொழுது பிரம்மா, காக்கும் பொழுது விஷ்ணு, ஸம்ஹரிக்கும் பொழுது சிவன்) விஷ்ணுவாகவே காட்சி அளிக்கிருர். இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட குணுதீதனுக, கண்ணனுக அவனைக் கண்டவர்கள் கோபிகள்தான். அதனுல்தான் உத்தவர் போன்ற ஞானிகளும், இந்த பிரேமை பக்தி எனும் பித்து பிடித்த கோபிகளிடம் சென்று கண்ணனைக் கண்டு கொள்ள நேரிட்டது. துவாரகையிலும்,

மதுரையிலும் லீலைகள் ஆடியவன்தான் கண்ணன் அல்ல; விஷ்ணுவே ஆகும். பிருந்தாவன லீலை ஆடியவன்தான் கண்ணன். அவனுக்கு எப்பொழுதும் வயது பதினொன்றுதான். இந்தக் கண்ணனைக் காணும் பாக்கியம் பெற்றவர்கள் ஞானிகள் அல்ல. ஆனால் பக்தி ஒன்றை மட்டும் அறிந்திருந்த எளிய கோபிகள்தான்.

இப்படி கீதையின் வியாக்கியானமாக விளங்கியவர்கள் கோபிகள். கோபிகளுடைய சிறப்பு அவர்களுடைய பிரேமை பக்தியும் சரணாகதியும் ஆகும். ஆக கீதையின் சாராம்சமும் இது இரண்டே ஆகிறது.

அன்பு! இன்பம்!! அமைதி!!!

வழிபாடு

எத்தனை சடங்குகளையும் ஆராதனைகளையும் எவ்வளவு ஒழுங்காகச் செய்தாலும் இதயத்தில் உண்மையில்லையாயின் எள்ளளவும் பயன் தரா. இறைவனை ஏமாற்றுவதேயாகும்.

கடவுளிடம் கூப்பாடு போடவும் வேண்டாம். கைகளைத் தட்டவும் வேண்டாம். மிகச் சிறிய ஒலியும் அவர்க்குக் கேட்கும்.

ஷின்டோ மதம்

அருட் கடலாகிய அஹுரமஜ்தா! என்னுடைய மனம் மொழி மெய் ஆகியவற்றின் தூய்மையை உமக்கு அர்ப்பணம் செய்கிறேன்! அறத்தையே புகழ்கின்றேன். என் உடலை உம் உடலாக எண்ணுகின்றேன்.

அஹுரமஜ்தாவுக்குச் செய்யும் வழிபாடு யாது? அறவோர்க்கு ஊழியம் செய்வதே. அறவோரே அஹுரமஜ்தாவின் அவதாரமாவர்.

ஜாரதுஷ்டிரர்

சிறிதேனும் வழுவாமல் செய்துவரும் அறமே ஆண்டவனுக்குப் பிரியமான நற்செயலாகும்.

இஸ்லாமிய மதம்.

தமிழ் மறைக் கழகம்,

அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு 1962

தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு 1962 இல் யூன் மாதம் மூன்றும் சனிக்கிழமை நடைபெறும் எனவும் 1–3–62க்கு முன் தேர்வுக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமெனவும் தமிழ்மறைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட செய்திகளாவன:–

தேர்வுப் பிரிவுகள்

தொடக்கப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாகத் தேர்வு நடைபெறும். தொடக் கப் பிரிவுக்கு 10 வயதுக்கு மேற்படாதவர்களும் கீழ்ப்பிரி வுக்கு 15 வயதுக்கு மேற்படாதவர்களும், மத்திய பிரிவுக்கு 20 வயதுக்கு மேற்படாதவர்களும் தோற்றலாம். மேற் பிரி வுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

தொடக்கபபிரிவுக்குத் திருக்குறளில் முதற் 15 அதிகாரங் களும், கீழ்ப்பிரிவுக்கு அறத்துப்பாலும், மத்தியபிரிவுக்கு அறத்துப்பாலும் பொருட்பாலும், மேற்பிரிவுக்குத் திருக் குறள் முழுவதும் தேர்வுக்குரிய பாடப் பகுதிகளாகும்.

17 பதக்கப் பரிசுகள்,

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறுபவர்களுக் குத் தங்கப் பதக்கமும் இரண்டாம் மூன்றும் நாலாம் இடங் களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப் படும். தொடக்கப் பிரிவுக்குத் தோற்றுபவர்களுள்ளே 50 சத வீதத்துக்குக் குறையாமல் புள்ளிபெறும் மிகக் குறைந்த வய துடையவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் உண்டு. 50 சத வீதத்துக்குக் குறையாமற் புள்ளி பெறும் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:–

தமிழ் மறைக் கழகம்,

58, 34ஆம் ஒழுங்கை — வெள்ளவத்தை.

எனும் முகவரிக்கு எழுதுக.

நாதப் பிரம்மம்

''ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்''

(ஸ்ரீ சி. செ. முத்துகுமாரு)

சென்ற பதினெட்டாவது நூற்றுண்டிலே பாரத நாட்டில் சோழ ராஜ்யத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூர் என்னும் புண்ணிய சேத்திரத்தில் கிரிராஜ பிரம்மம் என்ற ஸ்ரீ ராம பக்தர் ஒருவர் இருந்தார். இவர் ஒரு தெலுங்குப் பிராமணர். இவருக்கு ஐந்து குமாரர்கள் இருந்தனர். 'தந்தை எவ்வழி மைந்தரும் அவ்வழி' மைந்தர்களும் ஸ்ரீ ராம பக்தர்களாக மாறினர். இவர்களில் கடைசிப் புதல்வரின் பெயர் கிடைக்கவில்லை. ஆனால் இவர் இராம பிரான் மீது கொண்டிருந்த அன்பு, பக்தி, விசுவாசம் முதலியவற்றால் இவருக்கு ஸ்ரீ ராமப் பிரம்மம் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. ஸ்ரீ ராமப் பிரம்மம் சாந்தா தேவி என்னும் அம்மையாரை விவாகம் செய்து கொண்டார். இவர்களுக்கு முறையே பஞ்சாபிகேசன், தியாகராஜன் என்னும் இரு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள்.

ஸ்ரீ ராமப் பிரம்மத்திற்கு குடும்பச் செலவுக்கு வேண்டிய நிதி திருவாரூரில் கிடைக்கவில்லை. வறுமையால் அவரது மனைவியும் இரண்டு மைந்தர்களும் வாடினர். அவர் பொருள் சேர்ப்பதற்காக திருவையாற்றுக்கு குடும்பத்துடன் புறப்பட்டார். அங்கு தமது சொந்த இல்லத்தில் சங்கீதம் படிப்பித்து அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு ஒருவாறு தமது சீவியத்தை நடத்தி வந்தார். தமது இரண்டு பிள்ளைகளையும் அவ்வூரில் உள்ள ஸமஸ்கிருத கல்லூரியில் படிப்பித்தார். பஞ்சாபிகேசன் மனம் கல்வியில் நாட்டங் கொள்ளவில்லை. கெட்டவர்களுடைய சேர்க்கைகள் நடத்தினான். இறைவனுடைய நாமத்தை அடியோடு மறந்தான். இறை வழிபாடு செய்பவர்களைப் பரிகசித்தான்.

தன் மனைவியின் யோசனையினாலும் குடும்பக் கஷ்டத்தினாலும் ஸ்ரீ ராமப் பிரம்மம் தனது இளைய குமாரன் தியாகராஜனை கல்லூரிப் படிப்பிலிருந்து நிறுத்தினார். பின் அவ்வூரிலிருந்த சொண்டி வெங்கடரமணய்யரிடத்தில் சங்கீதப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பினார். இவ்வாறு வேத சாஸ்திரங்களையும் சங்கீதக்கலையையும்நன்கு கற்றுணர்ந்த தியாகராஜன் சிறந்த ஸ்ரீ இராம பக்தனானார். தியாகராஜனுக்கு பதின்நான்

காவது வயதில் அவரது தந்தை ராமப்பிரம்மமும். பதினைந்தாவது வயதில் தாய் சாந்தா தேவியும் காலமானார்கள் பஞ்சாபிகேசனுக்கும் தியாகராஜனுக்கும் திருமணமும் நிறைவேறியது. துஷ்ட சுபாவமுடைய தமையனுடன் வாழ விரும்பாத தியாகராஜன் தனிக் குடித்தனம் நடத்தினார்.

காஞ்சிபுரத்திலிருந்து திருவையாற்றுக்கு வந்த டூர் பாகவத சிரோன்மணி தியாகராஜனுடைய சங்கீத வித்வத் தன்மையையும் அவர் ஸ்ரீ இராம பிரான் மீது வைத்துள்ள பக்தியையும் பாராட்டி ஸ்ரீ தியாகராஜருக்கு "ஹரே ராம ஹரே ராம" என்னும் தாரக மந்திரத்தை உபதேசித்தார். அது முதல் இன்னும் விடாப் பிடியாக பகவான் நாம ஸ்மரணையிலேயே தியாகராஜர் இருக்கத் தொடங்கினர்.

தமது பாட்டனாரும் பின் தகப்பனாரும் ஆராதித்து வந்த இராம லக்ஷ்மண சீதா விக்கிரகங்களைத் தினமும் தவறாமல் ஆராதித்து வந்தார் தியாகராஜர். அடிக்கடி வீட்டிலே பிரார்த்தனைகள் உற்சவங்கள் முதலியன நடத்தி வந்தார். ஸ்ரீ ராமர் மீது பல கீர்த்தனைகளை இயற்றி பக்த கோடிகளின் மத்தியில் பாடி வந்தார். இவரது புகழும் பெருமையும் எங்கும் பரவிற்று. பலர் இவரில் பொறாமை கொண்டு இவரை இகழ்ந்தார்கள். சங்கீத வித்வான்கள் இவரது சங்கீதத்தை வேண்டுமென்றே குறை கூறினர்கள். இவரது தமையனான பஞ்சாபிகேசன் யாருக்கும் தெரியாமல் தியாகராஜர் ஆராதித்து வந்த ஸ்ரீஇராம லக்ஷ்மண சீதா விக்கிரகங்களைக்காவேரி நதியில் போட்டு விட்டான்.

மூர்த்திகளைக் காணாது வருந்தினர் தியாகராஜர். ஆகாரம் உண்ணவில்லை. நித்திரை இல்லை. கடைசியில் இராம பிரான் அருளினால் மூர்த்திகள் காவேரி மணலில் தோன்ற அவர் மனம் குளிர்ந்தது.

தியாகராஜருடைய சிஷ்யரான கன்னையதாஸ் திருவாங்கூர் சென்று அங்கு அரசாண்ட ஸ்வாதித் திருநாள் மகாராஜா முன்னிலையில் தாம் தியாகராஜரிடம் கற்ற கீர்த்தனங்களைப் பாடினர். ஸ்வாதித் திருநாள் மகாராஜாவும் தஞ்சாவூர் சரபோஜி மகாராஜாவும் பெரிதும் முயன்றும் தமது அரண்மனைகளுக்கு தியாகராஜரை அழைக்க முடியவில்லை. பகவத் சேவையில் ஈடுபடுவதைத் தவிர தமக்கு வேறு எக்காரியத்திலும் ஈடுபடவோ புகழ் பெறவோ பிரியமில்லை எனத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

பின்பு ஓர் நாள் திரிகால மூர்த்தியான நாரத பகவானே ஓர் கிழப் பிராமணராக வந்து தியாகராஜரைப் பாடச் சொல்லிக் கேட்டதாயும் "ஸ்வாரார்ணவம்" என்னும் நூலைக்

கொடுத்து விட்டுப் போனதாயும் அதன் காரணமாகவே தியாகராஜருக்கு சங்கீத சாயித்திய நிபுணத்துவம் ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் மூவாத்துப் பிழை என்ற ஊரில் பரம பக்தராயும் சங்கீத விற்பன்னராயும் விளங்கி வந்த கோவிந்தன் தியாகராஜர் முன் பாட அவர் திருப்தி அடைந்தார். பின் கோவிந்தன் பாடிய வர்ணத்திலேயே தியாகராஜர் ஓர் கீர்த்தனையை அருளிச் செய்தார். தியாகராஜர் பாடிய பஞ்சரத்தினம் என்கின்ற கீர்த்தனைகளில் அதுவும் ஒன்று. தியாகராஜர் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த வலாஜா பேட்டைக்குச் சென்று அங்கு தமது சிஷ்யரான வெங்கடரமண பாகதவருடன் சில தினங்கள் தங்கி விட்டு பிறகு திருப்பதிக்குப் போனார். திருப்பதியில் தியாகராஜர் சென்ற சமயம் திரை சாத்தி இருந்ததனால் திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாளின் தரிசனம் கிடைக்காது வருந்தினார். உடனே திரை அறுந்து விழுந்தது. பெருமாளின் தரிசனமும் கிடைத்தது.

பின் தியாகராஜர் கோவூர் சென்று சுந்தரேச முதலியார் என்ற பக்தருடன் சிறிது காலம் தங்கி விட்டு ஸ்ரீரங்கம் புறப்பட்டார். தியாகராஜருக்குத் தெரியாமல் முதலியார் இவரது பல்லக்கில் ரூபாய் ஆயிரம் கொண்ட ஓர் பண முடிப்பை ஒழித்து வைத்து அது விசயம் பற்றி தியாகராஜருடைய சிஷ்யர்களுக்கு மாத்திரம் தெரியப்படுத்தினார். காட்டு வழியில் கள்வர்கள் பல்லக்கை மறித்துக் கல் எறிந்து துன்பம் விளைவித்தனர். உடனே இராம லக்ஷ்மணர்கள் பல்லக்கின் அருகில் நின்று அம்பு எய்தார்கள். கள்வர்கள் நடுநடுங்கிக் கூக்குரலிட்டுக் கொண்டு தியாகராஜரைச் சரணடைந்து அவரிடம் தாம் செய்த பிழைக்கு மன்னிப்புக் கோரினார்கள். இவர்களது வாக்கு மூலத்திலிருந்து எய்தவர்கள் இராம லக்ஷ்மணர்கள் என்று அறிந்தார். திருடர்களுக்கு தரிசனமளித்த பகவான் தமக்குக் காட்சியளிக்காததையிட்டு மிகவும் வருந்தினார். பக்தன் வருந்துவதைக் கண்டு ஸ்ரீராமர் லக்ஷ்மண சீதா அனுமத் சமேதராய் தரிசனம் கொடுத்தார். பின் தியாகராஜர் ஸ்ரீரங்கம் சென்று அங்கிருந்து திருவையாற்றுக்குத் திரும்பினார்.

தியாகராஜருடைய மனைவி அவருக்கு ஏற்றபடி ஒழுகி வந்தார். அவர் ஓர் பெண்கள் திலகமாக விளங்கினார். அவர் திடீரெனமரணமடையவேஉலக வாழ்வை உதறித்தள்ள இதுவே தகுந்த சந்தர்ப்பம் என்று எண்ணி அவ்வாறேசெய்தார்.

தியாராஜர் பகவத் பக்தியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்க ஓர் நாள் பகவான் அவரது கனவில் தோன்றி இவர் பத்து நாட்களில் இறக்கப் போவதாயும் மறுபிறவி உண்டு என்றும்

கூறியருளினார். தியாகராஜர் தன்னுடைய இறப்பை எண்ணிக் கவலை கொள்ள வில்லை. எனினும் மறு ஜென்மம் எடுப்பதையிட்டு மனம் வருந்தினார். சன்னியாசம் வாங்கிக் கொண்டால் அத்துன்பம் தீரும் எனத் தெரியவே, அவ்வாறே உடனே சன்னியாசம் வாங்கிக் கொண்டார். பகவான் அருளியபடி ஸ்ரீதியாகராஜர் கலியுகம் 4948ம் வருஷம் பராபவ வருஷம் [1847ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ந் திகதி] புதன்கிழமை மார்கழிப் பகுள பஞ்சமித்திதியில்ஸ்ரீவைகுந்தத்தில் பகவானை அடைந்தார்.

தியாகராஜர் மதம், ஜாதி என்னும் கோட்பாடுகள் அற்று ஸ்ரீராம பிரான் பேரில் இயற்றியுள்ள கீர்த்தனைப் பாடல்களையும் பஜனாவளிகளையும் தவிர விக்னேஸ்வரர், கந்தர், பராசக்தி பரமேஸ்வரன் முதலிய தெய்வங்களைப் பற்றியும் பல நாமாவளிகளும் கீர்த்தனைகளும் பாடியுள்ளார். இவருக்குச் சைவம், வைணவம் என்ற வேற்றுமை உணர்ச்சி கிடையாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஓம் சாந்தி.

சிந்தையாலும் செயலாலும் தீமையை எதிர்க்கவும் மக்களுக்கு நன்மையைக் காட்டவும் செய்வதே ஓ அஹுரமஜ்தா உமக்குச் செய்வதற்குரிய வழிபாடு என்பதை உணர்ந்தேன்.

—ஜராதுஷ்டிரர்

மீன்போல் நீரில் மூழ்குவதால் கடவுளை அடைய இயலுமோ? தவளைபோல் இரவுபகலாகக் கத்துவதால் இறைவனைச் காணமுடியுமோ

வீட்டிலேயே குடும்பத்திலேயே இருந்து கொண்டே கடவுளிடத்தில் ஆழ்ந்துபோக முடியும்.

அன்பு செய்வதே வழிபாடு; ஆசையை எரிப்பதே ஆராதனை.

—சீக்கியமதம்

மனிதன்

அப்பா! உனக்கு இந்த வேதப்பொருளைக் கூறுகிறேன். மனித குலத்தினும் உயர்ந்தது எதுவுமில்லை. எவனும் தன்னை இழிவாக எண்ணுதலாகாது. தன்னை இழிவாக எண்ணுபவன் ஜயம் காணமாட்டான்.

—மகாபாரதம்

முருக வழிபாட்டின் தோற்றமும் தொன்மையும்

[முத்து]

''நானிலம் யாவும் ஓர் நாடக சாலையே'' என்பது செகப்பிரியர் வாக்கு. இங்கு நானிலம் என்றது பூமியை. பண்டைத் தமிழ் மக்கள் பூமியைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலமென நான்காக வகுத்தனர். அதனால் பூமிக்கு நானிலம் என்று பெயராயிற்று. பிற்காலத்தில் பாலை நிலத்தையுஞ் சேர்த்து ஐந்து நிலமெனக் கொண்டனர்.

பண்டைத் தமிழ் மக்கள் ஒவ்வொரு நிலத்து மக்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் விரிவாக இலக்கியம் கண்டதோடு இலக்கணமும் வகுத்தனர். குறிஞ்சி நிலமென்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். குறிஞ்சி நிலக் கடவுளை முருகன் என அழைத்தனர். முருகனின் தொன்மைக்கு இரண்டு சிறப்புகள் உண்டு. ஒன்று முருகன் தமிழ்க் கடவுள் என்பது; மற்றொன்று மலைநிலக் கடவுள் என்பது. தமிழன், தமிழ்ப் பெருமான், தமிழ் இறை, முத்தமிழோன், குறிஞ்சிக் கிழான், மலைக் கிழவோன் எனத் தமிழ்ப் பெரியோர்கள் முருகனை அழைத்துள்ளார்கள்.

முதன் முதல் மக்கள் வாழ்வு தோன்றிய இடம் தமிழ் நாடு ஆகும். தமிழகத்திலும் குறிஞ்சி நிலமே மக்கள் தோன்றிய முதல் இடமாகும். தமிழ்ப் பெருமகன் ஒருவனுடைய குடிப் பெருமையைப் பற்றிப் பேச வந்த புறப் பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலே வாளோடு முன்தோன்றி மூத்தகுடி'' எனக் குறிப்பிடுகின்றார் கல்தோன்றி மண்தோன்றாக்காலமென மிகப் பழமையைக் குறிப்பிட்டார் கல் என்றது மலையைக் குறிப்பதாகும்.

இங்ஙனம் பழமை வாய்ந்த குறிஞ்சி நில மக்கள் எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரம் பொருளை இயற்கையில் கண்டு ஆனந்தித்தனர். குறிஞ்சி நிலமெங்கும் இயற்கையழகே நிரம்பி இருக்கக் கண்டனர். யாண்டும் இறையுணர்வே தலையெடுத்து நின்றது. எல்லா இடத்தும் இளமை எழில் பூத்துக் குலுங்கக் கண்டனர். மாறா இளமை குறையாத அழகு, ஒரே தன்மைத்தாய மணம், எங்கும் நிரம்பிய கடவுட் தன்மை அத்தனையும் நிரம்பிய இடத்தில் தாம் சொந்த அநுபவத்தில் கண்டு போற்றிய இறைவனுக்குத் தமிழ் மக்கள் முருகன் என்று பெயரிட்டனர்.

தமிழ் நாட்டைப் பற்றிய எந்த வகையான ஆராய்ச்சிக்கும் தொல்காப்பியத்தைக் கருவியாய்க் கொள்வது வழக்கம். இப்பொழுதுள்ள நூல்களில் மிகப் பழமையுடையது தொல்காப்பியமே. தொல்காப்பியக் காலத்தை இத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகின்றார்களே அன்றி இன்ன காலம் தான் என அறுதியிட்டுக் கூறுவாரில்லை. தொல்காப்பியனார் காலத்தில் முருக வழிபாடு பழகி முதிர்ந்து வளம்பட்ட நிலையில் இருந்ததென்பதற்குத் தொல்காப்பியத்திலேயே அகச் சான்றுகள் பலவுள.

குறிஞ்சி நில மக்களுடைய வாழ்வு யோகமாகவே அமைந்திருந்தது. குறிஞ்சி நிலச் சூழ்நிலை மக்களை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்வது. யோகக் காட்சியில் கண்ட அனுபவமே முருகு என்பதாகும். முருகை உடையவன் முருகன் ஆகும். முருகன் என்ற சொல்லையே எத்தனை நாட்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தட்டுவதில்லை. வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம் ஆகிய நால்வகை எழுத்துக்களாலும் ஆயது முருகன் என்ற சொல் ஆகும். முருகா என்று சொல்லும் போதே ஒரு மென்மைத் தன்மை, குழைவு ஏற்படுகின்றது. முதலில் அடைந்திருக்கும் எழுத்தே மெல்லினமாகும். பின்பு இடையினம்: கடைசியில் வல்லினமாகும். 'க' விலுள்ள 'அ' வும், 'ரு' விலுள்ள 'உ' வும், 'மு' விலுள்ள 'ம்' உம் சேர்ந்து அ உ ம் ஓம் ஆகிறது. அ- அறிவையும், உ- உண்மையையும், ம்- இன்பத்தையும் குறிப்பதாகும். தமிழ் மக்கள் இயற்கையறிவில் கண்ட உண்மை இன்பம் முருகன் என்பதை இது சொல்லாமல் சொல்லி நிற்கின்றது. ஓம் என்ற ஒலியே எல்லாவற்றுக்கும் மூல ஒலி என்று வேதங்கள் கூறுகின்றன. இயற்கை ஓம் என்றே ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. எமது இதயத் துடிப்பை உற்றுக் கேட்டால் ஓம் என்று ஒலிப்பதையும் கேட்கலாம். குறிஞ்சி நிலத்தில் அருவிகள் ஓம் என்று ஒலித்துக் கொண்டே பாய்கின்றன. காற்று ஓம், ஓம் என்று சொல்லிக் கொண்டே வீசுகின்றது. பறவையினங்கள் ஓம், ஓம் என்று கூவுகின்றன. சூழ்நிலை முழுவதும் ஓங்காரத்தால் நிறைந்துள்ளன. அத்தகைய ஓங்கார ரூபனாகவே கண்டு களித்தனர் முருகனை.

"ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகனுருவங் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென் செய்வார் யமதூதருக்கே"

என்பது அருணகிரியார் வாக்கு.

சிந்து நதிக்கரையிலுள்ள மொகஞ்சோதாரோ என்னும் இடத்தைத் தோண்டிப் பார்த்த அராய்ச்சியாளர் மிக அடித் தளத்தில் தமிழர் நாகரீகச் சின்னங்கள் இருப்பதையே கண்டனர். ஆரியர் வருகைக்கு முன்னர் தமிழர் நாகரீகமே இந்தியா எங்கும் பரவியிருந்தது. சைவ வழிபாடு மிகத் தொன்மைவாய்ந்ததென்பதற்கு அவர்கள்கண்டெடுத்த சிவலிங்கங்களே சாட்சியாகும். தமிழர் திருமாலையும், இந்திரனையும், வருணனையும் கொற்றவை என்ற காளியையும் முருகனையும் வழிபட்டு வந்த போதிலும் முருகனே ஆதித் தமிழ்க் கடவுளாக இருந்திருக்கிறார். சிவபெருமானைச் சங்க இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நால்வகை நிலங்களில் எந்த நிலத்திற்கும் உரிய தெய்வமாகக் கூறவில்லை. சிவ வழிபாடு நிறைந்த வட இந்தியாவில்முருகனைச் சாமி என்றும்கார்த்திகேயன் என்றும் அழைப்பார்.

வட நாட்டில் முருக வழிபாடு மிக அருகி விட்டது. தமிழ் நாட்டார் முருக வழிப்பாட்டைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டனர். தமிழர் வாழ்வும் முருக வழிபாடும் ஒன்றி விட்டன. மனிதன் மனிதனாக வாழ வேண்டிய அன்பு பெரு நெறியே நமது இலக்கியமும் பண்படும் சுட்டிக்

காட்டும் வாழ்க்கைப் பெரும் பாதையாகும். இந்த அன்புப் பெரு நெறியை அழகுப் பெருநெறியின் ஓர் அம்சமாகக் காட்டுவது நமது தமிழ் நாகரீகத்தின் ஒரு தனிச் சிறப்பாகும். அருட்படைப்பாகிய உலகம் அருளாளனாகிய ஓர் அழகனது கைத்திறந்தான் என்று கண்டனர், தமிழ் நாட்டுப் பக்தமணிகள். கைததிறனாகிய கலை அனைத்தும் உள்ளுணர்ச்சியின் பெருக்கத்தை உலகிற்குணர்த்தும் சாதனங்களே. அழகுணர்ச்சியை நம் முன்னோர் தெய்வீக உணர்ச்சி ஆக்கிவிட்டார்கள்.

பார்க்கும் இடம் எங்கணும் நீக்கம் அற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தமே இறைவன் என்றார் தாயுமான சுவாமிகள். அந்த ஆனந்தத்தையே பரிபூரண அழகாய்க் கண்டனர், முருக பக்தர்கள். எங்கெல்லாம் உள்ளத்தை இழுக்கும் அழகு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் முருகனது கைத்திறன் காட்சியளிக்கிறது என்றார்கள்.

காலை இருட்டிலிருந்து இளஞ்சூரியன் உதிக்கும் அதிசயத்தைப்பார்த்துப் பார்த்து பரவசமானார்கள். நீல நெடுமேகம் ஒன்றின் உச்சியிலே ஒளி தோன்றுமாறு எழுந்த இளஞ் சூரிய முகத்தைப் பார்த்தார்கள். நீல மயிலை வாகனமாகக் கொண்டு முருகன் வெளிப்படுகிறான் என்று வழிபட்டார்கள். பால சூரியன் இருட்டை அளித்த நிகழ்ச்சியைக் கண்ட கருங்கடல் போன்ற சூரபத்மன் என்ற துஷ்ட அசுரனை வென்று விட்டான் நம் இறைவன்! அவன் அடிகளே நமக்கு அரணாகும் என்று வணக்கம் செலுத்தினார்கள்.

'சீர் இளந்தோகை மயில் மேலே — ஒரு
செஞ்சுடர் தோன்றும் திறம் போலே''

தோன்றியது முருகனது வேல் என்றார்கள்.

''நீலங் கொள் மேகத்தின் மயில் மீதே
நீ வந்த வாழ்வைக் கண்டதனாலே''

என்று அருணகிரியார் தாம் கண்ட அநுபவத்தை மற்றையோர்க்கும் திருப்புகழ்க் கண்ணாடி மூலம் காட்டுகின்றார்.

முருகனைத் தமிழ்க் கடவுள் என்று சிறப்பித்துப் பேசுவதும் உண்டு. முருகனைக் குறிஞ்சிக் கிழவனாக, பேரழகனாக, மணவாளனாக, இளையோனாக, சூர்ப்பகைவனாக, வெற்றிவேல் வீரனாகப் போற்றினர்; பாடினர். முருகனைச் சங்கப் புலவனாகவும் நூலறி புலவனாகவும் கண்டு பெருமிதம் எய்தினர். முருகன் பரமசிவத்தின் வேறில்லை எனக் கண்டனர்.

இவ்வுண்மை கந்தபுராணத்தில்,

''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்,
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமில் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்''

என அருமையாய்ச் சொல்லப்படுகின்றது.

காட்டிலுள்ள மயில் முருகனை நினைவூட்டுகின்றது. மான் வள்ளியை நினைவூட்டுகின்றது. வள்ளிநாயகியை முருகன் ஏற்றுக் கொண்டபோது வெறும் பெண்ணை மாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. சீதனமும் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றார். அவர் பெற்றுக் கொண்ட சீதனம் குறிஞ்சி நிலம் இதனைக் குமரகுருபர சுவாமிகள் மிக அழகுடன் உரைக்கின்றார்.

''திண்ணென் தடக்கை வெஞ்சிலை வேடர் குடிகொண்ட
சிறூரு மூரூர் தொறும்
செந்தினைப் புனமூடு தண்சாரல் பிறவுமாம்
சீதனக் காணி பெற்றுத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை அளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே''

முற்காலத் தமிழ் மக்கள் இயற்கையழகில் தாம் பெற்ற தெய்வ உணர்ச்சியை - முருக பக்தியை குறிஞ்சி நிலத்திலிருந்து முல்லை, மருதம்' நெய்தல் ஆகிய நிலங்களுக்கும் கொண்டுபோனார்கள். மேகங்கள் தவழும் மலைகள் இல்லாவிட்டால் காடும் நாடும் செழித்திருக்க முடியாது. அப்படியே முருகனருள் இல்லாவிட்டால் நாம் பிழைத்திருக்க முடியாது. பெருவாழ்வு வாழ முடியாது. மலைவாசத்தின் இன்பம் தமிழ் மக்கள் உள்ளத்தில் உள்ளுணர்ச்சியில் இடம் பெற்றது. ஞான மலையாகிய முருகப் பெருமானின் பேரின்ப நினைவுகளும் தமிழர்கள் உள்ளத்திலே நிலைபெற்றுவிட்டன.

தமிழர்கள் மலையை நோக்கினார்கள்; உற்று நோக்கினார்கள். முருகனைக் கண்டார்கள். மலையில் ஏறினார்கள்; மலையைச் சுற்றி வந்தார்கள். மலைப் புறங்களில் குடியேறினார்கள்; மலையருவிகளில் ஆடினார்கள்; மலை அழகுகளைப் பாடினார்கள். தங்கள் வாழ்வு தொடங்கிய இடம் மலை என்பதை உணர்ந்திருந்தார்கள். தங்கள் வாழ்விற்கு ஆதியும் அந்தமும் ஞான மலையாகிய முருகன் தான் என்பதையும் மறவாது பக்தி உணர்ச்சி கொண்டார்கள்.

முருகனுக்கு இந்தியாவில் ஆறுபடை வீடுகள் உண்டு. ஆறுபடை வீடுகளிலும் அமைந்த கோயில்கள் மலைமீது அமைந்தனவாகும். தெற்கே உள்ள கதிர்காம முருகனும் கதிரை மலையிலிருந்தே அடியார்களுக்கு அருள் புரிகின்றார். யோகிகள் துரியமலையில் முருகக் காட்சியைக் கண்டு ஆனந்தம் அடைந்தனர். நெற்றியின் புருவ மையத்தின் ஆறுமுகச் ஜோதிப் பிளம்பாயக் காலமெல்லாங் கண்டு பேரானந்தப் பெரு வாழ்வு பெற்றனர் யோகிகள். ''ஆறு சுடர் முகங் கண்டு விழிக்கின்பம்-ஆகுதே'' என்று பாரதியார் தமது மகிழ்ச்சியை இன்ப உணர்வை வெளியிட்டுக் கொள்கின்றார். அழகுணர்ச்சியும், ஆனந்த உணர்ச்சியும் விசேடமாக இறைவனைப் பற்றிய கவிதைகளில் ததும்பி நிற்கக் காணலாம். முருகனை பற்றிய சிறந்த கவிதைகளில் முருகன் கோயில் கொண்டிருக்கின்றான் என்றால் அது பிழையாகாது.

அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவேலுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய்

என்று புதுமைக் கவி பாரதியார் முருகனுக்குக் கவிதை கோயில் ஒன்று சமைத்து விடுகின்றார்.

பகுத்தறிவு யுகத்திலும் புரட்சிக் கவிஞர் தமது நம்பிக்கை மதத்தை வெளியிடுகின்றார்.

வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல்முருகன்
காலைப் பணிந்தால் கவலை போகும்

முருக பக்தியின் கவர்ச்சி இது;ஜீவ சக்தி இது. காரணம் உண்மையான அழகுணர்ச்சியை முருகன் வழிபாடு அடிப்படையாகக் கொண்டிருப்பது தான். முருகன் கோயில்களைப் பற்றிய பிரஸ்தாபம் புறநானூறு, அகநானூறு முதலிய சங்க நூல்களில் தான் காணப்படுகிறது. முருகன் வழிப்பாட்டையும், தமிழர் பண்பாட்டையும், பரந்த மனப்பான்மையையும் வெளியிடுகிறதென்று சொல்லலாம். தமிழ் நாட்டுக் குறிஞ்சி நில மகளாகிய வள்ளியம்மையை மணந்து கொண்ட முருகன் இந்திரன் மகளாகிய தேவயானையையும் மணந்த கொண்டான் என்பது கதை. தென்னாடும் வடநாடும் நாகரீகத்திலும் பண்பாட்டிலும் கருத்தொருமித்துக் கலந்து கொண்டன என்பது இக் கதையின் உட் பொருள்.

திரு முருகாற்றுப் படை கூறும் விவரங்களிலிருந்து தமிழ்க் கடவுளான முருகன் இமயமலையிலிருந்து தேவந்துறைமுனை வரையுள்ள மக்களுக்கெல்லாம் கடவுளாகத் திகழ்வதைக் காண்கிறோம். இலங்கையில் இருபெரும் சமூகங்களை ஒன்று படுத்தி வேற்றுமை களைந்து நாம் எல்லாம் ஒன்று என்னும் சமரச மனோபாவத்தை மக்கள் உள்ளத்திலே புகுத்தி வரும் பெருமை கதிர்காம முருகனுக்குரியதாகும்.

ஆணவத்தால் இறைவன் கவியைப்பழித்த நக்கீரர் சிவதுரோகத்திற்காளானார். கயிலை செல்லும் வழியில் பூதத்தினிடம் அகப்பட்டுத் திருமுருகாற்றுப் படை படை முருகனருள் பெற்றார். திருமுருகாற்றுப் படையின் இறுதியில் குறமகளின் பூசையைப் பற்றிய வருணனை வருகின்றது. மலைப்பக்கத்து உளர்களைப் பசியும் பிணியும் வருத்தாமலிருக்க வேண்டும், என்று முருக பூசை புரியும் குறமகள் வாழ்த்துகிறாள். இவளது உள்ளத் தூய்மைக்கு உவந்து முருகன் அருள் புரிகின்றான். குறமகளிர் ஆடும் குரவைக் கூத்தை முருகன் பெரிதும் விரும்புகின்றான். பண்டைய வழிபாட்டு முறையின் ஒரு பகுதியை இன்றும் கதிர்காமக் கோயிலிலும் செல்லச் சந்நிதி முருகன் ஆலயத்திலும் காணக்கிடக்கின்றது.

ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

1962 ஜனவரி மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

சென்ற மாதக் கணக்கு	26818884
பருத்தித்துறை	10080
வெள்ளவத்தை	2080
கட்டுவன்	38400
திமிலைத்தீவு	9280
சென் ஜோட்ஜ், தோட்டம்	5000
மதுகெதறத்தோட்டம்	5970
மத்துகம ,,	2160
பாந்திய தோட்டம்	2000
கல்வயல்	1890
நாகெனித் தோட்டம்	3200
நல்லூர்	23250
மத்துகம	3000
இலப்பந்துறப் பட்டினம்	1400
இயக்கச்சி	7200
கந்தர்மடம்	21265
பென்ரோஸ் கலபொட	12300
கற்றன்	4920
ஆனைக்கோட்டை	14400
உடுப்பிட்டி	38400
மதுரை	3795
பதுளை	12000
பன்வில	3000
பெல்மதுளை	5489
கைதடி	2998
மொத்தம்	27052361

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

ஆத்ம ஜோதி நிலைய வெளியீடுகள்.

திருமுறைக்காட்சி	(நா. முத்தையா)	1—50
பத்திரி யாத்திரை	,,	—75
ரைமணி மாலை	(பரமஹம்ச தாசன்)	—50
அறவுரைக் கதைகள்	(சுவாமி சிவானந்தர்)	—65
ராதையின் காதல்	(சுவாமி சிவானந்தர்)	1—00
இளங்கோவின் கனவு	(செ. நடராசன்)	2—25
ஆத்ம நாதம்	(சுத்தானந்த பாரதியார்)	அச்சில்

சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்

இன்று 14-ஆம் ஆண்டுச்சோதி மூன்றாவது சுடர் உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா இன்றுவரை அனுப்பாதோர் உடன் அனுப்பிவைத்துச் சோதியை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.
(சிலோன்.)

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்
R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்—2.
என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.

அரிய தமிழ் நூல்கள்

மகரிஷி சுத்தானந்தர், சுவாமி சித்பவானந்தர்,
டாக்டர் மு. வ, கி. வா. ஜ. ஆகியவர்களது
நூல்களும், மற்றும் அரிய சமய இலக்கிய
தமிழ் நூல்களும் கிடைக்குமிடம் :

சக்தி அன் கோ.,
35, கொத்மலி வீதி,
நாவலப்பிட்டி.

Printed & Published by Mr. N. Muthiah, Athmajothi Nilayam, N'pitiya
at Athmajothi Press, Nawalapitiya. (Ceylon) 14-2-62.